வெளியீடு - கந

சிறைச்சாலையைச் சீர்திருத்திய

# எலிசபெத் பிரை பெருமாட்டி

(ELIZABETH FRY)

312

ஆசிரியர் :

*மறைமலையடிகள் மகளாரும்*
*சென்னை நார்த்விக மகளிர் கல்லூரித் தலைமைத்*
*தமிழாசிரியராயிருந்தவருமாகிய*

**திருவாட்டி தி. நீலாம்பிகை யம்மையார்**

சாந்தி அச்சுக்கூடம்
சென்னை
நவம்பர் 1939

பதிப்புரிமை] [விலை அணா 10.

[*All Rights Reserved*]

PUBLISHED BY THE AUTHOR
Nov. 1939

THE SHANTI PRESS, MADRAS.

# முகவுரை

“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழு மில” —திருக்குறள்

மக்களாய்ப் பிறந்தவர்கள் பெறவேண்டிய சிறந்த பல இயல்புகளுள் முதன்மையானது பயன் கருதாது பிறர்க்குதவி செய்தலேயாம். பிறர் துன்பங்கண்டு இரங்கும் இயற்கையை மக்கள் எல்லார்பாலுங் காண்டல் அரிது. அவ்வியற்கை ஒரு சிலரிடமே அமைந்து உலகிற்குப் பெரு நன்மை விளைத்து வருவதை நாம் கண்டு வருகின்றோம். பிறர்க்கு உதவி செய்யும் இவ்வியற்கை இருவகைப்படும் :— ஒன்று தம் உற்றார் உறவினர்க்கு அன்புபற்றிச் செய்யப் படுவது; மற்றொன்று நமக்கு எவ்வகையிலுந் தொடர்பில்லாத அயலவர்க்கு அருளிரக்கத்தால் செய்யப்படுவது. நம் உற்றார் உறவினர்க்குச் செய்யும் உதவி பயன்கருதி யதாம், நமக்குத் தொடர்பில்லாதார் மாட்டுச் செய்யும் உதவி பயன்கருதாததாமாகும்.

பயன் கருதாது மக்களிடை உதவிசெய்த தமிழ்நாட்டு அருண்மாதர்களான **ஔவையார், மங்கையர்க்கரசியார்** முதலிய ஒருசிலர் வரலாறுகளைச் சுருங்கிய அளவில் நாம் அறிகின்றோம். மேனாட்டிலும் பயன் நோக்காது பேருதவி செய்து பெரும்புகழ் படைத்த அருண்மாதர்கள் பலருளர். அவர்கள் ஆற்றிய அரும்பெருஞ் செயல்களைப்பற்றி ஆங்குள்ள அறிஞர்கள் மிக விரிவான வரலாறுகள் எழுதி வைத்திருக்கிறார்கள். அத்தகைய வரலாறுகளுள் **எலிச**

**பெத் பிரை பெருமாட்டியாரது** வரலாறே தனிச் சிறப்பும் முதன்மையுமுடையதாய் விளங்குகின்றது. இவ்வருண்மிகு மாதரார், தமக்கு எவ்வகையிலுந் தொடர்பில்லாத ஏழை எளியவர்களுக்கும், சிறைச்சாலைகளிற் றுன்புற்றுக் கிடந்துழன்ற ஆயிரக்கணக்கான சிறைமாதர்களுக்கும் பெரும்பணியாற்றிப் பேருதவி புரிந்தார்.

இப் பெருமாட்டியாரது வரலாற்றை நந்தமிழ் நாட்டு மாதர்கள் கற்றறிதல் இன்றியமையாததாகும் என்று கருதி இந்நூலை எழுதலானேன். இதனை நம் தமிழ்நாட்டு மாணவ மாணவிகளும் ஏனைய மாதர்களும் நன்கு கற்றுப் பெரும் பயனெய்துவார்களாக.

ஆங்கில நூல்கள் பலவற்றிலிருந் தெடுத்து மொழி பெயர்த்த வரலாற்றுக் குறிப்புக்களுடன், என்னுடைய உரைப்பகுதிகளையும் ஒருங்கு சேர்த்து, இந்நூலை இறைவனருளால் ஒருவாறு எழுதி முடித்திருக்கின்றேன். இம் மொழிபெயர்ப்பு நூலுக்குச் சில குறிப்புக்கள் தந்துதவிய **K. அப்பாதுரைப் பிள்ளை, எம். ஏ.** அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

பாளையங்கோட்டை,
8-11-1939

**தி. நீலாம்பிகை**

# பொருளடக்கம்


பக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிறப்பும் வளர்ப்பும் | .... | 1 |
| 2. | இளமைக் காலம் | .... | 7 |
| 3. | அம்மையார் வாழ்க்கையிற் புதிய மாற்றம் | .... | 13 |
| 4. | அம்மையாரின் மணவாழ்க்கை | .... | 19 |
| 5. | குடும்பத்தொடு பிளாஷெட்டுக்குச் செல்லல் | .... | 25 |
| 6. | இங்கிலாந்தின் சிறைக்கூட நிலைமை | .... | 29 |
| 7. | நியூகேட் சிறைச்சாலையின் நிலைமை | .... | 33 |
| 8. | சிறைக்கப்பற் சீர்திருத்தம் | .... | 43 |
| 9. | அம்மையார் அறப்பணிகளைப் பற்றிய பெரியார் நற்கருத்துக்கள் | .... | 50 |
| 10. | அக்காலச் சிறைச் சட்டத்தின் கொடுமை | | 56 |
| 11. | அம்மையாருக்கு வந்த பொருட்கேடு | ... | 66 |
| 12. | நூல் நிலயங்கள் நிறுவல் | .... | 72 |
| 13. | பயணமும் பணியும் | .... | 76 |
| 14. | அரசியார் பாராட்டும் அம்மையார் முடிவும் | .... | 85 |
| 15. | அம்மையாரின் அருங்குணங்கள் | .... | 89 |

# படங்கள்

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| எலிசபெத் பிரை பெருமாட்டி | | (முகப்பு) |
| ஏர்ல் ஆம் வீடு | .... | 4 |
| திருமணம் | .... | 20 |
| நியூகேட் சிறைச்சாலை | .... | 34 |
| அம்மையார் நியூகேட் சிறைக்குள் செல்லுதல் | .... | 36 |
| அம்மையார் சிறையில் விவிலிய நூலைப் படித்தல் | .... | 41 |
| அம்மையாரின் பிள்ளைகளில் எழுவர் | .... | 81 |

3129



எலிசபெத் ஃப்ரை பெருமாட்டி

3129

## சிறைச்சாலையைச் சீர்திருத்திய

# எலிசபெத் பிரை பெருமாட்டி

(1780-1845)

## 1. பிறப்பும் வளர்ப்பும்

இங்கிலாந்து தேயத்தின் தலைநகரான **இலண்டன்மா நகருக்கு** நூறு கல் தொலைவிலுள்ள [1]**நார்விச்** என்னும் நகரில் 1780-ஆம் ஆண்டு மேத் திங்கள் இருபத்தோராம் நாள் [2]**எலிசபெத் அம்மையார்** பிறந்தார். இவர் தந்தையார் பெயர் [3]**ஜான் கர்னி**; தாயார் பெயர் [4]**காதரைன் பெல்.** இவர்கட்குப் பிறந்த பிள்ளைகள் பன்னிருவரில் எலிசபெத் அம்மையார் நான்காம் பிள்ளையும் மூன்றாம் மகளாருமாவர்.

### பெற்றோர் சிறப்பு

எலிசபெத் அம்மையாரின் தந்தையார் ஜான் கர்னி என்பார் பெருஞ்செல்வர். இவர் கல்வியறிவும் சிறந்தநோக்கமும் உடையவர்; அறிவு நூல்கள் கற்பதிற் பேரவா வாய்ந்தவர்; கற்ற அறிஞர்களை அன்புடன் வரவேற்று அவர்களோடு அளவளாவும் இயல்பினர். இவர் [5]**ஆட்டுமயிர்க் கைத்தொழில்** நடாத்திப் பெரும்பொருள் ஈட்டினர். 1803-ஆம் ஆண்டில், இவர் நார்விச்சிலுள்ள [6]**பொருள் நிலயத்தில்** முதன்மையான பங்காளியானர். இவர் [7]**ஜியார்ஜ் பாக்ஸ்** என்பாரின் சமயக்கொள்கையைத் தழுவிய [8]**குவேக்கர்**

---

1. Norwich 2. Elizabeth 3. John Gurney 4. Catherine Bell 5. Woollen-Manufacture 6. Bank 7. George Fox 8. Quaker

வகுப்பைச் சார்ந்தவர். இவர் தழுவிய குவேக்கர் கொள்கை சிறந்த கட்டுப்பாடுகளை யுடையது. தம் கொள்கைக் கிணங்க இவரும் இவர்தங் குடும்பத்தினரும் ஆரவாரம் இல்லா ஆடை அணிந்து, அன்பும் அமைதியும் இரக்க வுள்ளமும் உடையராய் வாழ்ந்துவந்தனர். பெருஞ் செல்வ ரான இவரிடம் எல்லாரும் விரும்பத்தக்க இனிய நல்லியல்பு கள் அமைந்திருந்தமையின் பல கொள்கையினரும் இவர் பால் நெருங்கிப் பழகுவாராயினர்.

அம்மையாரின் தாயார் காதரைன் பெல் என்பார் தங்கணவரைப் போலவே சிறந்த குணங்கள் பல அமையப் பெற்றவர். இவர், பொதுமக்கள் நலத்திற்காகத் தம் பெருஞ் செலவத்தைத் துறந்து சிறைவாழ்வை மேற்கொண்ட [1] **ராபர்ட் பார்க்லே** என்பாரின் பேர்த்தியின் மகளாராவர். கல்வியிற் சிறந்த இவர் கற்றார் பலருடன் கலந்து பழகு வதிற் பெருவிருப்புடையவர். கடவுட் கொள்கையில் தம்முடன் மாறுபட்டவரிடத்தும் இவர் வெறுப்புக் கொள்வதில்லை. ஆனால், நன்னெறிகளைப்பற்றிப் பேசுவதை விட மக்கள் அவற்றைத் தம் வாழ்க்கையிற் செயன்முறை யிற் கைக்கொண்டொழுகுவதே முதன்மையெனக் கருதும் இயல்பினர். அதுபோலவே, இவர் தாமும் தம் வாழ்க்கை யைச் சீரிய முறையில் நடாத்திவந்தனர். இவர், தம் மக்களை எம்முறையில் வளர்த்தன ரென்பதை நாம் கட்டாயம் அறி தல்வேண்டும். தம் குறுகிய வாழ்நாளில் தம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு எவ்வாறிருக்க வேண்டுமென்பதையும் அதற்கேற்ப அவர்களை எவ்வெவ்வகையிற் பயிற்றுவிக்க

1. Catherine Bell was a Great-Grand daughter of Robert Barclay, author of Barclay's *Apology*.

வேண்டுமென்பதையும் இவர் நன்கறிந்திருந்தனர். கல்வி யறிவின்றிப் பிள்ளைகளின் அறிவு விளங்காதாகலின், முதன் முதல் இவர் தம் மக்களுக்குக் கல்வி கற்பித்துவந்தார்.

மற்றவர்களைப்போல் உலக இன்பங்களை நுகர்வதே தம் வாழ்க்கையின் முடிவான நோக்கமென்று அம்மையார் கருதினரல்லர். இவர் மேற்கொண்ட கடவுட் கொள்கை யும், அறிவு நூற்கல்வியும், கற்றதற்கேற்ப ஒழுகுஞ் சீரிய ஒழுக்கமும் இவர்தம் மக்கள் நன்முறையில் வளர்தற்குத் தூண்டுகோலாய் அமைந்தன. கல்விகற்றல், கடவுளிடத் தன்பு கொளல், பிறர்க்குதவி செய்தல் ஆகியவற்றில் அம் மையாரின் மக்கள் சிறந்து விளங்கியதோடு, தம் வீட்டு வேலைகளை ஒழுங்காய்ச் சுருசுருப்பொடு செய்யவும், தம் உடைகளைத் தாமே தைத்துக்கொள்ளவும், தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை அன்பொடு வரவேற்கவும் தம் அன்னை யாரால் நன்கு பழக்கப் பெற்றிருந்தனர். இன்னும் அவர் கள் தம் வீட்டு வரவுசெலவுகளைச் செவ்வனே எழுதிவரவும் நாடோறும் தங்குடும்ப நிகழ்ச்சிகளை நாட்குறிப்பிற் குறித்து வைக்கவும் கற்பிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு அறிவின் மிக்க காதரைன் பெல் அம்மையார் தம் மக்களை வீட்டி லேயே சிறந்த முறையிற் பழக்கி வந்தமையின், அவர்கள் அறிவின்மிக்க **அருமணிகள்** எனத் திகழ்வாராயினர்.

> ‘பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற.’

என்ற **குறள்**மொழிக்கிணங்க ஜான் கர்னியாரும் அவர்தம் மனைவியாரும் தம் அருமை மக்களொடு மிக்க மகிழ்வுடன் வாழ்ந்துவந்தனர்.

## தந்தையார் ஏர்ல் ஆமிற் குடிபுகல்

எலிசபெத் அம்மையார் ஆறுண்டினரா யிருந்தபோது, கர்னியார் தாமிருந்த **நார்விச்** இல்லம் தம் பெருங் குடும்பதிற்குப் போதாதது கண்டு, அதற்கு இரண்டு கல் தொலைவிலுள்ள [1]**ஏர்ல் ஆம்** என்னும் இடத்தில் பெரியதொரு வீடும் அதனைச் சூழ ஒரு நிலப்பரப்பும் வாங்கினார். இவ்வழகிய இல்லம் மரஞ்செடிகொடிக ளடர்ந்த ஓரழகிய தோப்பின் நடுவே அமைந்திருந்தது. கர்னியார் தம் மனைவிமக்களொடு அப் புதிய இலலத்தின்கண் குடி புகுந்தார். புது இடம் குழந்தைகளின் உள்ளத்தை எவ்வகையிலுங் கவரக்கூடியதா யிருந்தது. அப் பெரிய இல்லத்தின் பக்கத்தே [2]**வென்சம்** என்றுஞ் சிற்றுறு ஓடுவதும், அதன் இருகரைகளிலும் அடர்ந்த பெரிய மரங்கள் அமைந்திருப்பதும் கர்னியாரின் மக்களுக்குப் பெரு மகிழ்வினைத் தந்தன. எலிசபெத் அம்மையாரும் அவர்தம் உடன் பிறந்தாரும் இயற்கைக் காட்சியின் பேரழகுமிக்க அவ் விடங்களிற் பெருங்களிப்புடன் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தனர். காதரைன் பெல் அம்மையார் தம் முதற் புதல்வி காதரைனக் [3]கிட்டி என்றும், தம் மூன்றும் புதல்வி எலிசபெத்தை [4]பெட்சி என்றும் பெயரிட்டழைத்தனர்.

## அன்னையார் பிரிவு

இவ்வாறு ஜான் கர்னியும் அவர்தம் மனைவியாரும் தம் அருமை மக்களுடன் அப்பெரிய இல்லத்திற் குறைவின்றிப் பெருமகிழ்வொடு வாழ்ந்துவருங் காலத்தில் எலிசபெத்தின் அன்னையார் நோய்வாய்ப்பட்டு மூன்று கிழமை படுக்கையில் இருந்தனர். அவர்பால் அன்புமிக்க எலிசபெத்

---

1. Earl Ham 2. Wensum 3. Kitty 4. Betsy



ஏால ஷிரு

3129



அம்மையார் அந்நாட்களில் தம் அன்னையாரை மிகவுங் கருத்தாய்க் கவனித்துவந்தனர்; தம் அன்னையார் பகலில் உறங்கும்போதுங்கூட அவர் உயிர்நீத்தனரோ என்று அஞ்சி, அவரது மூக்கிற் கைவைத்து உயிர்ப்பு ஓடுகின்றதா என்று பார்ப்பார். இவ்வாறிருந்தும், அன்னையார் 1792-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் தம் [1] **பதினொரு மக்களையும்** விட்டு இவ்வுலக வாழ்வு நீத்தனர். இறக்குந் தருவாயில் அவர் தம் பிள்ளைகளைத் தங் கணவரிடமும் தம் மூத்த மகள் 'கிட்டி'யிடமும் ஒப்படைத்தனர். அறிவும் அன்பும் மிக்க தம் அருமை அன்னையின் பிரிவால் பிள்ளைகள் பெரிதும் வருந்தினர். மற்றவர்களை விட எலிசபெத் அம்மையார் தம் அன்னையின் பிரிவால் அடைந்த துன்பம் அளவிடற்கரியது. இவர் ஒருநாளிற் பலமுறை தம் அன்னையை நினைந்து நினைந்து கண்ணீர் உகுப்பர். அன்னை இறந்து நாற்பது ஆண்டு கழிந்த பின்னருங்கூட, 'என் அருமை அன்னையின் சாக்காட்டு நினைவு என் உள்ளத்தை இன்னும் உருக்குகின்றது' என்று இவர் கூறுகின்றார்.

தாயார் இறந்ததும் இவர்தந் தமக்கையான 'கிட்டி' என்பாள் தன் தாயின் முழுப் பொறுப்பையும் அன்பையும் மேற்கொண்டு தம் உடன்பிறந்தாரனைவரையும் தாயைப்போலவே பார்த்துவந்தாள். எலிசபெத்தும்

1. (1) Catherine (born 1776) (2) *John* (1777-1778) (3) **Rachel** (1778) (4) Elizabeth (**1780**) (5) **John** 2 (1781) (6) Richenda (1782) (7) Hannah (1783) (8) Louisa (1784) (9) **Priscilla** (1785) (10) **Samuel** (1786) (11) **Joseph** (1787) **John** (1788) (12) **Daniel** (1791).

இவர் உடன்பிறந்தாருந் தம் தமக்கையிடம் பேரன்புடையராய் அவள் சொற்படி நடந்துவரலாயினர். காதரைன் (கிட்டி) எதனையும் ஆராய்ந்து திறம்படச் செய்யும் இயல்புடையவளாகலான் இவளை எல்லாரும் புகழ்ந்தே பேசுவர். இவளது இயற்கையைப்பற்றி இவள் உடன்பிறந்தாளான **லூயிசா** என்பாள், "என் தமக்கையிடம் எனக்கு மிகுந்த அன்புண்டு; அவளைப்போல் பெருந்தன்மையும் ஈரநெஞ்சமுமுடையாரை யான் இதுகாறுங் கண்டிலேன்; அவள் பிறர்நலனுக்காகத் தந்நலங்களை வெறுப்பவள்; பிறர்க்கு உதவிசெய்கின்றோமென்ற முனைப்பான எண்ணங்கூட இல்லாதவள்" என்று கூறுகின்றாள். இன்னும், "எம் தமக்கை கிட்டியைநோக்க யானும் மற்றைத் தங்கைமாரும் அவ்வளவு மெச்சத் தகுந்தவர்களல்லர்" என்று எலிசபெத் அம்மையார் கூறுவதுகொண்டு காதரைனின் சிறந்த இயற்கை நன்கு புலனாகின்றது.

# 2. இளமைக் காலம்

எலிசபெத் அம்மையார் தம் இளமைப் பருவத்திலேயே நாணமும் அடக்கமும் உடையவர். முதன்முதல் இவர் கூரிய அறிவுடையவராகக் காணப்படவில்லை; கல்வி கற்பதில் ஊக்கமின்றி யிருந்தமையால், இவரது கல்விப் பயிற்சி குறைபாடுடையதாகவே இருந்தது. இவர், தாம் நினைத்தவற்றைப்பற்றி ஒரே பிடியாய்ப் பேசுமியல்பினர். இவர்பால் இருபெருங் குணங்கள் சிறந்தனவாகக் காணப்பட்டன: அவை, எப்போதும் பிறர்க்கு உதவி செய்யும் ஈரநெஞ்சமும், தளரா ஊக்கமுடைமையுமேயாம். இவரை நன்குணர்ந்த இவருடைய தமக்கை காதரைன், “எலிசபெத்தினிடம் வெளிப் பார்வைக்குத் தோன்றும் செயல்களைக் கொண்டு அவளைப் பொறிவும், போராற்றலும், முற்போக்கும் அற்றவளென்று சொல்ல முடியாது” என்று கூறுகின்றாள். குழந்தைப் பருவமுதல் எலிசபெத் அம்மையார்க்கிருந்துவந்த விடாப்பிடியான குணம் நாளடைவில் அவர் பின்னே செய்யப் போகின்ற அரும்பணிக்குப் பெருந்துணையாய் நின்றது. கடவுளிடத்தன்பு, துன்புற்றோர்க்கிரங்கல் ஆகியவற்றில் இவர் ஒரே பிடியா யிருந்தமையின் அவற்றால் இவர்க்கும் உலகத்தார்க்கும் நன்மையே விளைவதாயிற்று. இவர்பாலிருந்த அடக்கமும் அமைதியும் இவர் மனவுறுதியை மிகுதிப்படுத்தின.

எலிசபெத் அம்மையார் பதினெட்டு ஆண்டுவரை அழகுமிக்க சிவப்பு நிறப் பட்டாடைகள் அணிந்து குதிரை மீதேறி வெளியே உலாவச் செல்வர். இவர்தம் தந்தையாரின் குவேக்கர் கொள்கைக்குச் சார்பில்லாத ஆடல்பாடல், குதிரை யேற்றம், பந்து விளையாட்டு ஆகியவற்றில் இவ

ருடன் பிறந்த பெண்மக்களனைவரும் மிகுந்த விருப்ப முடையவர்களாயிருந்தனர். ஆகலான், எலிசபெத் அம்மை யார் தம் உடன்பிறந்தாரொடு ஆடல்பாடல்களிற் கலந்து மகிழ்வாய்க் காலங் கழித்துவந்தனர். இவர் சிறந்த ஆடை அணிந்து குதிரையூர்ந்து டைஞர் முழக்கும் இசைக்கருவி களைக் கேட்டுவருவர்; ஆயினும் இவர்தம் உள்ளத்தில் பிறர் துயர் கண்டிரங்கும் இயற்கையே சிறப்பாக அமைந்திருந் தது. அதனைப் பின்வரும் நிகழ்ச்சிகளா லறியலாம்:

## நார்விச் சிறைச்சாலையைப் பார்வையிடல்

அவர்தம் பதினைந்தாம் ஆண்டில் எலிசபெத் அம் மையார் **நார்விச்** என்னும் இடத்திலுள்ள சிறைக் கூடத்தில் அடைக்கப்பட்டிருக்கும் பெண் குற்றவாளி களைத் தமக்குக் காட்டவேண்டு மென்று தம் தந்தை யாரை அடிக்கடி வேண்டிவந்தனர். ஆனால் துன்பமென் பது இன்னதென்றறியாத் தம இளமகளைக் கொடுங்காட்சி கள் நிறைந்த அச்சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லலாகா தென்று அவர் தந்தையார் கருதினர். ஆயினும் எலிசபெத் அம்மையார் அச்சிறைக்கூடத்தைக் கட்டாயம் பார்க்க வேண்டுமென்று விரும்பித் தம் தந்தையாரை வேண்ட அவர் அதற்கிணங்கி அவரை ஒருநாள் அங்கு அழைத்துச் சென்ற னர். அங்கே அம்மையார் தம் தந்தையின் கையை இறுகப் பற்றிக்கொண்டு சிறைமாதர்களைப் பார்த்துக்கொண்டே வந்தார். மிகமெலிந்து பல துன்பங்களுக்கு ஆளாகி அங்கு வருந்தும் அச்சிறைமாதர்களின் வாடிய முகங்களையும் அழுக்கான கந்தை ஆடைகளையுங் கண்டு அம்மையார் வருந்தினர்; வீடுவந்து சேர்ந்ததும், சிறைமாதர்களின் துன்பநிலையைத் தம் மகிழ்வான வாழ்வுடன் ஒப்புநோக்கிப் பார்த்து, "ஐயகோ! இவ்வுலக வாழ்க்கை இத்துணைப் பெருந்

துன்பமுடையதாயின், அருட்பெருங் கடலாகிய ஆண்டவனது இருப்பிடந்தான் எங்கே? அவர் இருப்பது உண்மையாயின் அச்சிறைப் பெண்கள் படுந் துயரை அறியாரா? அவர்கள் துன்பம் நீங்கி நலமடைவது எக்காலம்!" என்று தமக்குள்ளே வினவிக்கொண்டனர். அம்மையார் எதனையும் அமைதியாக ஆராயும் பேரறிவுடையவராகலான், முதலில் ஐயுற்று ஒருவாறு மனந்தேறி இம்மாதர்கள் சிறையிற் படுந் துயரின் காரணம் இன்னதுதானென்று அறிந்தார்; அறிந்து, 'கடவுள் தாம் படைத்த ஒவ்வோர் உயிரிலும் மறைமுகமாய் நின்று இவ்வுலகத்தையும் உலகமக்களையும் இயக்குகின்றாரென்பதை மக்கள் உணராமல் இருக்கின்றனர். அல்லாமலும், எல்லாம் வல்ல இறைவர் நமக்கு நல்லது இது, தீயது இது என்று பகுத்துணரும் உணர்ச்சியையும் தந்திருக்கின்றார். இந் நல்லுணர்ச்சி கொண்டு நாம் நம் அறிவை நல்வழிகளிற் பயன்படுத்த அறியாமலிருக்கின்றோம். ஆனால் ஆண்டவனது கருத்திற்கு மாறாக ஒருவருக்கொருவர் தீங்கு புரிந்தும், தந்நலமே பேணியும் நடக்கின்றோம். நாம் நம் பொருளையும் வன்மையையும் உலகத்துன்பங்களை நீக்கி நன்மைதரும் வழிகளிற் பயன்படுத்துகின்றோமில்லை." என்று கூறுகின்றார். இதுமுதற் கொண்டே அம்மையார் உள்ளத்தில் துன்புற்றார்க்கு உதவி செய்யவேண்டுமென்ற எண்ணம் மேன்மேலும் உரம் பெறலாயிற்று.

எலிசபெத் அம்மையாரும் அவர்தம் உடன்பிறந்தாரும் கற்றோரோடுறவாடிக் கல்விகற்பதிலும், மாலைவேளைகளில் தம் அழகிய தோட்டத்தில் ஆடிப்பாடி விளையாடுவதிலும் மிக மகிழ்வாய்க் காலங்கழித்து வந்தனர். அவ்வாறிருக்கையில் [1] **ஜேம்ஸ் லாய்ட்** என்னுந் துரைமகனார் எலிசபெத் அம்

1. James Lloyd

மையாரை மணஞ்செய்ய விரும்பினர். ஆனல், அம்மையார் அவரது ஒழுக்கமின்மை கண்டு மணவாழ்க்கையை அப்போது வெறுத்தனர்.

இக்காலத்தில், [1] **ஜான் பிட்ச்போர்டு** என்னும் உரோமன் கத்தோலிக் பெரியார் ஒருவர் கர்னி குடும்பத்தாருடன் நண்பராயினர். ஆதலால், இவர் அம்மையார் வீட்டிற்கு அடிக்கடி வரலானர். இவர் சிறந்த சமயப் பற்றுள்ளவர். எலிசபெத் அம்மையார்க்கும் அவர்தம் உடன்பிறந்தார்க்கும் இவர் மிக இனிமையாகவும் திறமையாகவும் கடவுளுண்மைகளை எடுத்து விளக்கினர். 'நார்விச் நகரில் நாங்கள் பழகிய அறிஞர்களில் அஞ்சாநெஞ்சுடன் சமய உண்மைகளை எமக்கு ஐயமறக் கற்பித்தவர்களுள் பிட்ச்போர்டு என்னும் பெரியாரே முதன்மையானவராவர்' என்று அம்மையார் தமது நாட்குறிப்பிற் குறித்து வைத்திருப்பதிலிருந்து இது உய்த்துணரப்படும். பிட்ச்போர்டின் அறிவுரை கேட்டதுமுதல் அம்மையார் மனம் கடவுள் நெறியிற் செல்வதாயிற்று. அம்மையார்க்குப் பதினேழாம் ஆண்டும் நிரம்பியது.

## சேவரிப் பெரியாரைக் காணல்

அமெரிக்க நாட்டினின்றும் நாடு நகரங்கள் தோறும் போந்து அரிய பெரிய சமய விரிவுரைகள் செய்துவந்த [2] **உவில்லியம் சேவரி** என்னுங் கிறித்தவப் பெரியார் [3] **நண்பர் கழகத்தார்** அழைப்புக் கிணங்கி **நார்விச்** நகருக்கு, 1778-ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் 3-ஆம் நாள், வந்து சேர்ந்தார். அன்று நார்விச்சில்

---

1. John Pitchford
2. William Savery
3. The Society of Friends

கோட்ஸ் தெருவிலுள்ள "நண்பர் கழக" நிலயத்தில் அவர் ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தச் சென்றார். அவ்விரிவுரை கேட்க எலிசபெத் அம்மையாரும் அவர்தம் உடன் பிறந்த பெண்மக்களறுவரும் சென்று விரிவுரை மேடையின் எதிரே ஒரே வரிசையில் அமர்ந்திருந்தனர். சேவரிப் பெரியார் தமது அரிய சொற்பொழிவை நிகழ்த்தினர். அவர் நிகழ்த்திய விரிவுரை கேட்போர் உள்ளத்தை உருக்குந் தன்மையதாயும் கடவுளுணர்ச்சியை எழுப்புந் திறத்ததாயு மிருந்தது. அம்மையாரின் உடன்பிறந்தாரனைவரும் அவர் விரிவுரையை மிக்க கருத்தோடு கேட்டுக்கொண் டிருந்தனராயினும், எலிசபெத் அம்மையார்மட்டும் அவ்விரிவுரையிற பெரிதும் ஈடுபட்டு மனம உருகி இடையிடையே கண்ணீர் உகுத்தபடியா யிருந்தனர். கூட்டம் முடிந்தபின் அம்மையார் சேவரிப் பெரியாரை அணுகித் தம் சிறியதந்தையார் இல்லத்திற்குத் தேநீர்விருந்துக்கு வருமாறு வேண்டினர். அம்மையார் வேண்டுகோட் கிணங்கி அப்பெரியார் விருந்திற்குச் சென்றனர். அது முடிந்ததும், சேவரிப்பெரியார் மாலை விரிவுரைக்கு வண்டியிற் புறப்பட்டார். அப்போது அம்மையாரும் அவருடன் சென்றார். செல்லும் போது அப்பெரியார் எல்லாம்வல்ல இறைவன் பெருமையினையும் அறச்செயல்களையும்பற்றி அம்மையார் இன்னுந் தெளிவாகவும் விளக்கமாகவும் உணருமாறு எடுத்துக் கூறினார்; கூர்ந்து கேட்டறிந்த அம்மையார் பெருங்களிப்புடன், "இன்றுதான் கடவுள் ஒருவர் உளரென்பதை உணர்கின்றேன்; யான் விரிவுரை செய்யத் துவங்குவேனாயின், மற்றவரைப் பார்க்கிலும், எல்லார்க்கும் ஆண்டவனிடத்து அன்பும் நம்பிக்கையும் உண்டாமாறு செய்வேன்" என்று நுவன்றார். எலிசபெத்தின் சிறந்த அறிவையும் கடவுட்பற்றையுங் கண்ட சேவரிப் பெரியார், "எலிசபெத்

இன்னுஞ் சிலகாலத்தில் உலகிற்கு ஒரு சிறந்த பணியாற்றப் போகின்றார்" என்று மொழிந்தார்.

பின், அம்மையாரின் தந்தையார் அவரையும் அவருடன்பிறந்த பெண்மக்கள் அறுவரையும் அழைத்துக் கொண்டு [1]வேல்சுக்குப் புறப்பட்டார்; புறப்பட்டுப்போய் அங்குத் தம் நண்பரொருவர் இல்லத்திற் றங்கியிருந்தார். அந்நகரின் 'நண்பர் கழக'த்தில் [2]ரிபெக்கா யங் என்னும் மாது ஒருவர் ஓர் அரியசொற்பொழி வாற்றினர். அதன் சார்பாக, [3]டெபோரா டார்பி என்னும் ஆண்டு மிக்க மாதொருவர் சமயநெறியைப் பற்றியும் அறப்பணிகளைப் பற்றியும் சிறந்த தொரு விரிவுரை நிகழ்த்தினர். இவற்றைக் கேட்டு எலிசபெத் அம்மையார் மன முருகப்பெற்றார். இவர் முகக் கவர்ச்சியையும் அழுத்தமான கடவுட்பற்றையுங்கண்ட டெபோரா டார்பி என்பார் இவரை மிகப்பாராட்டி, "எலிசபெத் குருடர்க்கு ஒளிபோன்றும், மூங்கையர்க்கு மொழிபோன்றும், முடவர்க்குக் கால்போன்றும் விளங்குவார்" என்று மொழிந்தார். "இவர் கூறிய நல்லுரைக்கு நான் தகுதியுடையவளாவேனோ?" என்று அம்மையார் மனங்கவன்றனர்.

1. Wales 2. Ribecca Young 3. Deborah Darby

# 3. அம்மையார் வாழ்க்கையிற் புதிய மாற்றம்

இவ்வாறு அம்மையார் பெரியார் பலரொடு பழகிக் கல்விகேள்விகளிற் சிறந்தவரானார். ஜான் பிட்ச்போர்டு, சேவரி ஆகிய இவ் இருபெரியார்களின் அறிவுரைகளைக் கேட்டதுமுதல் அம்மையார் மனம் முற்றும் மாறுதலடைந்தது. உலக இன்ப வாழ்வில் இவர்க்கிருந்த பற்று வரவரக் குறைந்துகொண்டே வந்தது. இவர் தம்மாற் கூடியமட்டும் [1] **விவிலிய நூ**லிற் கூறுகிறபடி வழுவாது நடக்கவேண்டுமென்று உறுதிகொண்டனர். அவ்வாறே, இவர் ஏழைகள், துன்புற்றோர், துணையற்றோர் முதலியவர்கட்கு வேண்டும் உதவிகளைச் செய்யத் துவங்கினார். அம்மையார் அடைந்த இப்புதிய மாற்றத்தைப்பற்றி இவர் உடன் பிறந்தார் [2] **ரிச்செண்டா**, "என் உடன்பிறந்தாள் பெட்சி என்னும் எலிசபெத் நாளுக்கு நாள் குவேக்கர் கொள்கையில் மிகக் கருத்தாய் நிற்பது எனக்கு வருத்தத்தைத் தருகின்றது; ஏனெனில், அவள் இப்போது எங்கள் ஆடல்பாடல்களுக்கு வருவதில்லை; அழகுமிக்க ஆடை அணிகலன்களை வெறுத்துப் பகட்டில்லா எளிய தூய வெண்ணிற ஆடைகளையே உடுத்துகின்றாள். யாங்கள் எழுவரும் இதுகாறும் எல்லாவற்றிலும் ஒற்றுமையாயிருந்தோம். ஆனால், இப்போது அவள்மட்டுமே எங்களில் மாறுபட்டவள்போற் காணப்படுகின்றாள். என் செய்வது? அவளது உள்ள எழுச்சிக்குத் தக்கவாறு நாங்கள் எங்களைத் தேற்றிக் கொண்டோம். அவள் மிகச் சுறுசுறுப்பாகவும், ஏழைகளிடத்தன்பும் இரக்கமும் உடையவளாகவுமிருக்கின்றாள். அவள் குவேக்கர் கொள்கையை மேற்கொண்டு

---

1. Bible  2. Richenda

உயர்ந்த வழிகளில் மேலோங்குகின்றாளென்பதில் ஐய மில்லை" என்று கூறுகின்றாள்.

இந்நிலையில், அம்மையாரின் தமக்கையாரான கிட்டி என்பாள் எலிசபெத் அம்மையாரை எப்படியாயினும் தந் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று எவ்வளவோ முயன்றாள்; ஆயினும் அவள் முயற்சி பயன் பெறவில்லை. எலிசபெத்தின் உள்ள நிலை மாறுபட்டது எதனாலென்று தமக்கையார் அவரை வற்புறுத்திக் கேட்டதற்கு அவர், "யான் இவ்வாறாதற்குக் கடவுள் மொழி (அசரீரி) ஒன்று என்னைத் தூண்டியது. என் விருப்பம்போல் யான் ஏதுஞ் செய்யவில்லை; என் வாழ்க்கையின் புதிய மாற்றத்தின் பயனாக யான் மனநிறைவும் அமைதியு முடையவளானேன். போதிய அளவு ஆராய்ந்தே இம் முடிவுக்கு வந்திருக்கின்றேன்" என்று விடை பகர்ந்தார்.

இன்னும், "யாங்கள் எலிசபெத்தின் மாறுதலைக் குறித் துச் சொல்லுவதெல்லாம் அவளுக்குப் பெருந் துயரைத் தரு கின்றன. அவள் தான்கொண்ட கொள்கையினின்றுஞ் சிறி தும் விலகமாட்டாள். அவள் பயிலுவதெல்லாம் விவிலிய நூலே. ஏழைகளுக்கும் பிணியாளர்களுக்கும் தொண்டு செய்வதைத் தவிர வேறு வேலையில் அவள் மனம் ஈடுபடுவ தில்லை. அவள் உள்ள நிலையை நாம் அறியக் கூடவில்லை. எம்மிடம் மிகப் பொறுமையா யிருக்கின்றாள். அவள் நெஞ்சத்தில் ஆண்டவனே நின்று அவளை நடத்துகின்றான் என்று நான் அறிகின்றேன்" என்று எலிசபெத் தங்கை மார்களில் ஒருத்தி மொழிகின்றாள்.

எலிசபெத் அம்மையாரின் உள்ளக் கருத்தை நன்கறி தல்வேண்டி இவர்தம் தந்தையார் இவரை இலண்டன்மா

நகருக்கு அழைத்துச் சென்றனர்; சென்றதும், எலிசபெத் அம்மையார் அங்கு நண்பர் பலரொடு உறவாடுமாறும், நாடகசாலைகளில் நடக்கும் ஆரவாரங்களையும் களியாட்டங்களையுங் காணுமாறுஞ் செய்தனர். ஆனால், அம்மையார் ஆரவாரங்களையும் களியாட்டங்களையும் அறவே வெறுத்தனர். அஃதன்றி, "நாடகசாலைகட்கு மக்கள் போவதால் தீமைக்குத்தான் ஆளாகின்றனர்" என்றும் இவர் கூறினார்.

இங்கு ஒன்று உன்னிக்கற்பாலது. அம்மையார் கூறிய படி இக்காலத்தும் நாடகசாலைகட்குப் போகின்றவர்கள் நல்ல பயன் ஏதும் அடைகின்றார்கள் என்று திண்ணமாகக் கூறுதற்கில்லை. ஆண்மக்களைவிடப் பெண்மக்களே இக் காலத்திற் பெருங்கூட்டமாய்ப் படக்காட்சிகளுக்குப் போகின்றார்கள்; அங்குக்காட்டப்படும் படக்காட்சியில் நல்லொழுக்க முறைகள் மிகக் குறைவாகவும், நலமையல்லாதனவே மிகுந்துங் காணப்படுகின்றன. ஆகலான், படக் காட்சிக்குச் செல்லும் பெண்கள் கடவுளைப்பற்றியேனும், கல்வியின் அருமை பெருமைகளைபபறறியேனும், சிறந்த ஒழுகலாறுகளைப்பற்றியேனும அறிந்துவருகின்றார்களா? இல்லை யன்றோ! ஆனால அவர்கள் அங்கு அறிந்துவருவது தான் யாதெனின், அந்நாடக மாந்தர்கள் அணியும் பகட்டான ஆடையணிகலன்களே; அவற்றைக் கண்டுவந்து அவைகளை அவ்வாறே தாங்களும் அணிய விரும்புகின்றார்கள். விரும்பித் தங்கள் தாய்தந்தையர், கணவன்மார் ஆகிய இவர்கள் வருவாயின் நிலை யறியாது அவைகளை வாங்கித் தருமாறு துன்புறுத்துகின்றார்கள். இதனாலன்றோ தங் கட்டிளமைக் காலத்திலேயே அம்மையார் இதனுண்மை யுணர்ந்து இதனை மிக வெறுத்துக் கூறினர்!

## அம்மையாரின் முதல் அறப்பணி

அம்மையார் இப்போது, தம் பேரறிவால் இவ்வுலக நிலைகளையெல்லாம் நன்கறிந்திருந்தனர். ஆகலான், இவ்வுலக இன்பத்தினால் மனதிற்கு நிலையான பேரின்பமில்லை என்பதறிந்து இவர் அதனைப் பெறுதற்கு முயல்வாராயினர். எல்லாம் வல்ல ஆண்டவன் அன்பும் இரக்கமுமுடையவனாதலால், அவன் தன்மைகளை மேற்கொண்டு ஏழை எளியவர்களுக்குந் துன்புற்றோர்க்கும் எந்தெந்த வகையிற் பணியாற்றலாம் என்று இவர் கருதிப் பார்த்தார். கருதிப்பார்த்த அளவில் பொதுப் பணி செய்வதற்குத் தாம் ஓர் உண்மைக் குவேக்கர் ஆகவேண்டும் என்பதை அம்மையார் உணர்ந்தார். 'குருடர்க்கு ஒளி போன்றும், நொண்டிக்குக் கால் போன்றும், ஊமைகயர்க்கு மொழிபோன்றும் ஆவார்' என்று டெபோரா டார்பி என்பார் தம்மைப்பற்றிக் கூறிய நன்மொழிக்கு ஏற்ப, அம்மையார் தம் வாழ்க்கையின் செயன்முறைகள் அமைய வேண்டுமென்று விரும்பி ஆண்டவனை வேண்டினர். எல்லாம் வல்ல ஆண்டவன் வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈவான் என்பதுணர்ந்த இவர் கல்வியறிவில்லா ஏழைமக்களுக்குக் கல்வி புகட்டவேண்டுமென்று பெரிதும் விழைந்தார். விழைந்து, அம்முயற்சியை மேற்கொள்வதற்குமுன் குறைபாடுடைய தம் கல்வியை நிறைவு செய்துகொள்ள விரும்பினர். விரும்பியவாறே பெரிதும் முயன்று ஆங்கில இலக்கண இலக்கிய நூல்களையும், பிற அறிவு நூல்களையும் விடாமுயற்சியுடன் இவர் கற்றறிந்தனர். அதன் பின், இவர் தாமிருந்த ஏர்ல் ஆம் என்னும் இடத்திலும், அதன் சுற்றுப் புறங்களிலும் எழுத்து மணமறியாச் சிறுவர்களும், சிறுமியர்களும், முதியவர்களும் நிறைந்திருந்தமையைக் கண்டார். அவர்கட்குக் கதைகள்

கூறி அறிவு புகட்டவோ, சமய நூலறிவைப் பயிற்று விக்கவோ அக்காலத்தில் எவரு மில்லாதிருந்தனர். மேலும் அங்குள்ளவர்கள் தஞ் சமயநூலின் பெயரைக் கூட அறியாதிருந்தனர். அவ்வா றவர்கள் இருந்த நிலைமையினை [1] ஹாநா மோர் என்பார் கீழ்வரும் நிகழ்ச்சியினாற் புலப் படுத்துகின்றார்: அஃதாவது, "நாங்கள் [2] செத்தர் என்ற ஊரில் ஒரேவொரு விவிலிய நூல்தான் கண்டோம்; அது வும் ஒரு பூந்தொட்டிக்குக்கீழ்த் தாங்கலாக வைக்கப் பட்டிருந்தது" என்பதே. இத்தகைய அறியாமையிருளிற் படிந்து கிடந்த அவ் ஏழை எளிய மக்களுக்குக் கல்வி கற் பிக்க எண்ணித் தம் வீட்டில் ஓர் அறையில் அம்மையார் ஒரு பள்ளிக்கூடம் நிறுவினார். அதில் ஒரேவொரு சிறு பையன் றான் முதலிற் கல்விகற்கப் புகுந்தான். அவனுக்கு ஞாயிற் றுக் கிழமைதோறும் மாலை வேளையில் விவிலியநூற் கதை களை அவர் கற்பித்துவந்தார். அச்சிறுவன் அக்கதைகளை நன்கு கற்று, அவைகளைத் தன் நண்பர்கள் பலர்க்குங் கூறி வந்தான். அந்நண்பர்கள் பலரும கூட்டங் கூட்டமாக இவ் அம்மையார் கல்விச்சாலைக்கு வந்து கல்வி பயிலத் தொடங்கினர்; அவர்களிற் சிலர் குறும்பு செய்யும் இயல்பி னர். குறும்பு செய்யும் மாணவர்கட்கு அம்மையார் பாடஞ் சொல்ல முடியாதெனக் கூறினால், அவர்கள் இவர்க்கு உடனே கீழ்ப்படிந் தொழுகுவர். அச் சிறுவர்களுடைய ஊக்கத்தையும் அறிவின் ஏற்றத்தையுங் கண்ட அம்மையார் மகிழ்வுடன் அவர்கட்குக் கல்வி கற்பித்ததுமன்றி அறிவுரை கள் கூறியும்வந்தனர். இவ்வாறு அச்சிறு மாணவர்கள் எழுபதுக்குமேற் சேர்ந்திருந்தமையின் முன்னிருந்த தம் வீட்டிலுள்ள இடம் போதாமை கண்டு, இவர் அதனருகே

1. Hannah More 2. Cheddar

வெறுமையாயிருந்த [1] **துணி வெளுப்பகத்தை** வேண்டிப் பெற்று, அதில் அப்பள்ளிக் கூடத்தை யமைத்தனர். ஞாயிற்றுக்கிழமை மாலை அவர்கட்கு இவர் விவிலியநூல் கற்பித்து வந்ததோடு கிழமையில் இரண்டு நாள் மற்றைப் பாடங்களை யும் கற்பித்துவந்தார். புத்தகங்கள் இல்லாமலிருந்த அக் காலத்தே பிறருதவியின்றி இவர் இத்தனை மாணவர்க்கும் தாம் ஒருவராகவே கல்வி கற்பித்துவந்தமை போற்றற் குரியதன்றோ ? ஆயினும் இஃது இவர்தம் உடன்பிறந்தார்க் குப் பிடிக்கவில்லை. குறும்பு செய்யும் பெட்சியின் மாண வர்களை இவர்தம் உடன்பிறந்தார்கள் [2] " **பெட்சியின் குறளி கள்** " என்று கூறுவர். தம்முடைய பதினேழாம் ஆண்டி லேயே வேறெவருஞ் செய்ய இயலாத இத்தகைய பெரும் பணியை அம்மையார் மேற்கொண்டமை வியப்பன்றோ !

1 Laundry 2. Betsy's imps.

# 4. அம்மையாரின் மணவாழ்க்கை

எலிசபெத் அம்மையாரின் தந்தை ஜான்கர்னி என்பார் தம் மகளார் உலகியல் ஆரவாரங்களை வெறுப்பது கண்டு, அவர் இல்வாழ்க்கையையும் வெறுத்துவிடுவரோ என்று எண்ணி வருந்தினார். இவ்வருத்தம் நீங்குங்காலம் வந்தது. இலண்டன்மா நகரில் ஒரு சிறந்த வாணிகச் சாலையிற் கூட்டு வாணிபஞ் செய்துகொண்டிருந்த [1] **ஜோசப் பிரை** என்பார் அம்மையாரின் தந்தையார்க்கு நண்பராயினர். அவர் நல்லியல்பினர்; ஆரவாரமின்றி வாழும் ஒரு குவேககர்; [2] **உவில்லியம் ஸ்டார்ஸ் பிரை** என்பாரின் கடைசிப் புதல்வர். அம்மையாரின் தந்தையார் நற்குணமுள்ள அவரைத் தம் மகளார்க்குத் தக்க துணைவராக அமைக்கக் கருதி, அவரை அடிக்கடி தம் இல்லத்திற்கு வரவழைத்தனர். பின்னர் ஒருநாள் அவர் தம் மனக்கருத்தை மகளார்க்குத் தெரிவித்தனர். அதற்கு அம்மையார் தந்நோக்கம வேறென்று கூறி மணவினையை மறுத்தனர். ஆயினும், ஜோசப் பிரை எப்படியாயினும் எலிசபெத்தை மணந்துகொள்ளலா மென்று உறுதியாய் நம்பியிருந்தார்.

ஜோசப் பிரை என்பாரை எலிசபெத் அம்மையார் தவிர மற்ற உடன்பிறந்தார்கள் விரும்பவில்லை. ஏனெனில், பிரை என்பாரின் வெளித்தோற்றங் கவர்ச்சியற்றது ஆதலினாலேயே. எலிசபெத்தும் அவரை ஏற்றுக்கொள்ள மறுப்பரென்று மற்றவர்கள் நினைத்தனர். அம்மையாரோ இதுபற்றி ஏதுங் கூறாதிருந்தனர். இவர் தந்தையார் மறுபடியும் பிரையை அழைத்து எலிசபெத்தின் கருத்தையறிந்து முடிவாகத் தெரிவிக்குமாறு கேட்டனர். திடீ

---

1. Joseph Fry 2. William Storrs Fry

ரெனக் கேட்டால் அம்மையார் கருத்து எவ்வாறிருக்குமோ என்று பிரையார் ஐயுற்று அமைதியாயிருந்தனர். குறிப்பாக அம்மையாரின் மனநிலையை அறிதற் பொருட்டு ஒருநாள் அவர் பொற்சங்கிலியிட்ட ஒரு கைக் கடியாரத்தை அம்மையார் வீட்டுத் தோட்டத்தில் வரும் வழியில் வைத்துவிட்டு மறைந்திருந்தனர். சிறிது நேரத்தில் எலிசபெத் அம்மையார் அப்பக்கம் வரும்போது அதைக் கண்டனர். கண்டதும், அவர் அதன் குறிப்பை யுணர்ந்து, சிறிது நேரம் அப்பொருளின்முன் நின்று அதனை எடாமல் வீட்டினுட் சென்றனர். அப்போது அவர் தந்தையார் பிரையாரைக் கட்டாயம் மணந்துகொள்ள வேண்டுமென்று அம்மையாரை வற்புறுத்தினர். தம் மணத்தைப் பற்றி அம்மையார் ஆண்டவனை நினைந்து வேண்டினர்; உடனே அம்மையாரின் உள்ளத்தில் பிரையாரை ஏற்குமாறு ஓர் உணர்ச்சி எழுந்தது. ஆனால், அவரை மணப்பதால் தாம்செய்யுந் தந்நலமற்ற தொண்டிற்கு ஏதேனும் இடையூறுண்டாகுமோ என்று அம்மையார் ஐயுற்றனர். பின்னர் நெடுநேரம் நினைத்துப் பார்த்து, முடிவாக இறைவனைத் தம் மனதில் வழுத்திக்கொண்டு தோட்டத்திலிருந்த அக் கைக்கடியாரத்தை அவர் எடுத்துக் கொண்டனர். இது கண்ட பிரையார் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். பின்னர் மணவினையைப் பற்றி இருவரும் உரையாடிய போது அம்மையார் செய்யுந் தொண்டிற்குத் தாம் ஏதும் இடையூறு செய்வதில்லையென்று பிரையார் அவரிடம் உறுதி கூறினர். 1800–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 19-ஆம் நாள் அம்மையார்க்கும் ஜோசப் பிரை துரைமனுர்க்கும் நார்விச் நகரில் "நண்பர் கழக" மண்டபத்தில் திருமணம் பெருமகிழ்வுடன் சிறப்பாக நடந்தேறியது. மணவினை நடக்கும்போது, மணமகனுர் "எல்லாம் வல்ல



அம்மையார் திருப்பணி

ஆண்டவனும் இங்குக் கூடியிருக்கும் மாபெருங் குழுவினரும் அறிய என்நண்பி எலிசபெத் கர்னி என்பாளை என் மனைவியாக யான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். கடவுளறிய யான் என்உயிருள்ளவரை இன்பதுன்பங்கள் இரண்டினும் அவளைப் பிரியேன்" என்று இறைவனை நினைந்து மிக உருக்கமாக மொழிந்தார். எலிசபெத் அம்மையாரும் கடவுள் நினைவோடும் மிகப் பணிவோடும் அவ்வாறே கூறினர். மணவாழ்க்கையானது ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும் உலக நிலையினை இனிது காட்டும் ஒரு வாயிலாகும். மணமான பின்னரே மக்கள் உலக இயற்கைகளை நன்கறிந்து இன்ப துன்பங்களில் ஈடுபடுகின்றார்கள். ஆதலின், திருமணங்கள் மிக அமைதியாயும் கடவுள் நினைவுடனும் தக்க பெரியார் வாழ்த்துடனும் நடப்பதே சிறந்த முறையாகும். மணமாகும்போது எலிசபெத் அம்மையார்க்கு ஆண்டு இருபது. அம்மையார் மணத்தின் பிறகு இவர்தங் கணவனார் பெயர் பிரை என்பதுஞ் சேர்ந்து **எலிசபெத் பிரை** என்னும் பெயர் அம்மையார்க்கு வழங்கலாயிற்று.

## இல்லஞ் சேரல்

அம்மையார் மணமானதிலிருந்து தங் கணவருடன் இலண்டன் மாநகரத்தில் வாழ்வாராயினர். மணவினையின் போது கூறிக்கொண்ட உறுதிமொழிகட்கேற்ப இவ்விருவரும் ஒருவர்மீதொருவர் மிகவும் அன்பு பாராட்டித் தம் இல்வாழ்க்கையினை இனிது நடாத்தினர். மணத்தின் பின்னரேனும் அம்மையார் தங்கணவர் பொருட்டாயினும் அழகிய பட்டாடைகள் உடுத்த விரும்பினரா? இல்லையன்றோ! அவர் வழக்கம் போல் தூய வெண்ணிற ஆடையையே உடுத்திவந்தனர். மண

மானதிலிருந்து அவர் தம் வீட்டிலே களிப்புடன் வாளாயிராமல், அந்நகரின் மூலைமுடுக்குகளில் பொறுக்கொணுத் தீநாற்றமுள்ள இடங்களில் வாழும் எளியவர்கள் பாற் சென்று அவர்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்தும், அறிவுரைகள் பல கூறியும் வருவர். அவரும் அவர்தங் கணவனும் அடிக்கடி மாலை வேளைகளில் வெளியே உலாவச செல்வதுண்டு. செல்லும் வழியில் ஒரு நாள், இரப்பவள் ஒருத்தி பசியாலும் குத்திருமலாலும் குற்றுயிராயிருந்த கைப்பிள்ளை ஒன்றை அம்மையாரிடம் காட்டி இரந்து நின்ருள். உடனே அம்மையார் மனம் இரங்கி, அவள் நிலையறிய விரும்பி, அவள் வாழ்ந்து வருங் குடிசைக்குச் சென்ருர். அங்கே அவள் கையிற் கொணர்ந்து காட்டிய பிள்ளையைப் போலவே பல குழந்தைகள் அக் குடிசையில் அடைந்து கிடப்பதைக் கண்டார். கண்டு உள்ளமுருகி, அங்குள்ள குழந்தைகளின் நோயை நீக்குவதற்குத் தம் வீட்டு மருத்துவரை மறுநாள் அங்கு அனுப்புவதாக அவளிடங் கூறி வீடு திரும்பினர். அவ்வாறே அம்மையார் மறுநாள் தம் மருத்துவரை அங்கு அனுப்பிப் பார்த்துவரச் செய்தனர். அம்மருத்துவரும் அங்குப் போனுர். ஆனல் அவர் வருமுன்னரே அவ் இரப்போள் தன்னிடமிருந்த பிள்ளைகளுடன் எங்கோ ஓடிவிட்டாள் எனக் கேள்வியுற்ருர். இச்செய்தியை யறிந்த அம்மையார் அதன் உண்மையறிய விரும்பினுர். அப்போது, அக்குழந்தைகளெல்லாம் ஊர்ப் பொதுப்பணியைச் சார்ந்தவைகள் என்றும், அக்குழந்தைகள் இம்மாதினிடம் ஒப்படைக்கப்பட்ட பின் பொதுப்பணியாளரது மேற்பார்வை இல்லாமற் போனதால், அவள் அக்குழந்தைகளை வெளியிற் காட்டி இரந்து பொருள்பெற்று, அவர்களைப் பட்டினி போட்டுக் கொன்றும் குற்றுயிராயும் துப்புரவின்றியும்

வைத்துவருகின்றாள் என்றும் அம்மையார் அறிந்தனர். சிறு பிள்ளைகளிடத்து மிகுந்த அன்புடையவராகலான், இக்கொடுங்காட்சியும் தீய செயலும் அவர் மனதைப் பெரிதும் புண்படுத்தின. செல்வ மிக்கவராயினும் அம்மையார் தங்குடும்பத்தைத் தாமே மிகத் திறமையாக நடாத்திவந்தார். வீட்டில் தமக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களைமட்டும் அவர் அழகாயும் துப்புரவாயும் வைத்துக்கொள்வர்; தமகது வேண்டியதற்கு மேற்பட்ட பொருள்களை வைத்துக் கொள்வது துன்பமென்று அவர் கருதினர். இவ்வாறு அம்மையார் தங்குடும்பத்தைச் செவ்விதின் நடாத்தி ஏழை எளியவர்கட்கு உதவி செய்துவருங் காலத்தில் அம்மையார்க்கு மக்கட் பேறுண்டாயது.

## மக்கட் பேறு

1801-ஆம் ஆண்டில் அம்மையார்க்கு முதன்முதல் ஒரு பெண்மகவு பிறந்தது. அப் பெண்மகவுக்குத் தம் அன்னையின் பெயராகிய **காதரைன்** என்பதை இட்டனர். அம்மையார் இலண்டன்மாநகரில் அதன்பின் தங் கணவருடன் ஒன்பதாண்டுகள்வரை இருந்தனர். அக் காலங்களில் அவர்க்கு ஐந்து குழந்தைகள் பிறந்தனர். அம்மையார் “நண்பர் கழகத்”தைச் சார்ந்தவராகலான், அவர் இல்லத்திற்கு விருந்தினர் அடிக்கடி வருவது வழக்கம். தம் குழந்தைகளைப் பார்க்கவும், விருந்தினரை வரவேற்கவும் அவர்க்கு நேரம் போதாதிருந்தது. ஆயினும், சிறிது ஓய்வு கிடைத்தாலும், அவர் ஏழைகளுக்கு உதவி செய்யச் செல்வதில் தவறார்.

## மேற்பார்வையாளராக அமர்தல்

சர்ச் தெருவிலுள்ள "நண்பர் கழகத்தார்" அம்மையாரை அங்குள்ள ஒரு தொழிற்சாலைக்கும், அதைச் சார்ந்த பள்ளிக்கூடத்திற்கும் **மேற்பார்வையாளராக** ஏற்படுத்தினார்கள். இவ்வேலை அம்மையார்க்கு ஏழைகள்மாட்டுள்ள பேரிரக்கத்தை வளர்ப்பதற்குப் பெருந்துணையாயிற்று. எனினும், இத்தகைய தொண்டுகள்கூட அம்மையாரது உள்ளத்திற்கு அமைதி தரவில்லை. இன்னும் விரிவாக அறப்பணி செய்யவேண்டுமென்றும், ஏழை மக்களிடம் மிக நெருங்கிப் பழக வேண்டுமென்றும் அவர் பேரவாக் கொண்டனர். தம் குடும்பத்திற்குமட்டுந் தாயாகவுந் தலைவியாகவும் இருப்பது போதாது; இன்னும் மக்களிடையே தாம் பெரும்பணி புரியவேண்டுமென்று அடிக்கடி அவர் கூறிவந்தனர். இக் காலத்தில் அம்மையாரின் உடன்பிறந்தார் ஒருவர், "என் தமக்கை எலிசபெத்தை எல்லாரும் விரும்புவது இயல்பாயினும், அவள் குடும்பத்தை நடத்து முறைகளைக் கண்டவர்கள் அவளை இன்னும் மிகுதியாக விரும்புவர்" என்று கூறினர். அம்மையார் தங்கணவர்பாற் சிறந்த அன்பும் உண்மையுமுடையவர்; தம் பிள்ளைகளிடமும் அவ்வாறே மிக்க அன்பாயும் கருத்தாயும் இருப்பர்; உடன்பிறந்தாரிடமும் மிக நேயமாயிருப்பர்; நண்பர்கட்கும் உறவினர்கட்கும் ஏழை எளியவர்கட்கும் உதவி செய்வர்; ஆகலான் அம்மையாரை விரும்பாதார் எவருமிலர்.

1 Grace Church

## 5. குடும்பத்தோடு பிளாஷெட்டுக்குச் செல்லல்

1808-ஆம் ஆண்டு அம்மையாரின் மாமனூர் உவில்லியம் ஸ்டார்ஸ் பிரை என்பார் [1] பிளாஷெட்டில் நோய்வாய்ப் பட்டிருந்தார்; ஆதலால் அவர் அம்மையார் இருந்த இலண்டன்மாநகருக்குக் கொண்டுவரப்பட்டார். தம் மாமனூர் நோயால் வருந்தும்போது அன்பே வடிவான அம்மையார் அவர்க்கு மிக்க அன்புடன் வேண்டுவன செய்தார்; செய்தும் பயனில்லை. அவர் மாமனூர் இவ்வுலகவாழ்வை நீத்தனர்.

ஆகவே, அம்மையார் தம் ஆறு குழந்தைகளுடன் இலண்டன்மாநகரை விட்டுப் பிளாஷெட்டிலுள்ள தம் மாமனூர் வீட்டிற் குடிபுகுவாராயினர். இயற்கைக் காட்சியின் அழகுமிக்க பிளாஷெட்டிற்குச் சென்றது அம்மையார்க்கும் அவர்தங் குழந்தைகட்கும் மிக்க மகிழ்வினைத் தந்தது! இங்கும் அவர் காலத்தை வீண்போக்காமல் வீட்டு வேலைகளைச் செய்தல், குழந்தைகளைப் பாதுகாத்தல், பள்ளிக்கூடங்களைப் பார்வையிடல், பிணியாளர்கட் குதவிசெய்தல் ஆகிய அறப்பணிகளை ஒழுங்காகவே நடாத்திவந்தனர். அம்மையார் ஓய்வின்றி வேலை செய்து வந்ததால் அப்பேருழைப்பு அவர் உடல்நிலைக்கு மிகுதியாகவேயிருந்தது. "ஓய்வின்றி வேலை செய்வதாலும் அடிக்கடி விருந்தினரை வரவேற்பதாலும் நான் களைத்துப் போகின்றேன்" என்று அம்மையாரே கூறியிருக்கின்றூர்; இந்நிலையிலுங்கூடத் தாம் செய்யும் மக்கட் பணி குறைவான நிலையிலிருக்கிறதென்றே எண்ணினூர். இதுவரை பொதுக்கூட்டங்

1. Plashet.

களில் அம்மையார் பேசிப் பழகவில்லை; அப்படிப் பேச நேரிட்டபோதுங்கூடப் பேசப் பின்னடைந்தார்.

## அம்மையார் தந்தையாரின் பிரிவு

அம்மையார்க்கு ஆறு குழந்தைகள் பிறந்தபின் அவருடைய அருமைத் தந்தையார் 1809-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வு நீத்தனர். அவரை அடக்கஞ்செய்த இடத்திற்கு அம்மையார் அடிக்கடி சென்று கல்லறையின் பக்கத்தேயிருந்து, தந்தையாரின் உயிர் இறைவன் திருவடிக் கீழ் அழியாப் பேரின்பத்தை நுகர்தல் வேண்டுமென்று நெடுநேரம் இறைவனை வாய்விட்டு வழுத்தி வேண்டிவந்தனர். இவ்வாறு அடிக்கடி அவர் மிக உருக்கமான சொற்றொடர்களால் ஆண்டவனை வாயார வாழ்த்தத் துவங்கியது முதல் அம்மையார்க்கு முன்னிருந்த கூச்சமும் அச்சமும் நீங்கப்பெற்றுப் பொதுக்கூட்டங்களில் தெளிவாகப் பேச அவர் முன்வந்தனர். ஏர்ல் ஆமில் முதன்முதற் கூடிய **விவிலிய நூற் கழக**த்தில் அம்மையார் விரிவுரை யொன்று நிகழ்த்தினார். அவ்விரிவுரையின் சொல்லும் பொருளும் மிகத் திருத்தமாயும் தெளிவாயு மிருந்தன. ஆதலால், அதனைக் கேட்டோர் அம்மையாரைப் பெரிதும் பாராட்டினர்.

## பிளாஷெட்டில் பள்ளிக்கூடம் நிறுவல்

அம்மையார் பிளாஷெட்டில் ஏழை எளியவர்கட்கு மிகுதியான உதவி செய்துவந்தனராயினும், கல்வி யறிவில்லாத ஏழைப் பெண்கட்குப் பள்ளிக்கூடம் ஒன்று வைக்க வேண்டுமென் றெண்ணினார். அது கருதி, அவர்தம் வீட்டிற்கெதிரே பயன்படாமற் கிடந்த ஒரு பெரிய கட்டிடத்தை அதற்குரியாரிடங் கேட்டு அவர் வாங்கினார். வாங்கி,

சில நாட்களில் அவ்வூர்க் கோயிற்றலைவர் உதவியாலும் பெருமாட்டிகள் சிலர் உதவியாலும் பள்ளிக்கூடத்தை அக்கட்டிடத்தில் நிறுவினார். அதில் எழுபது பெண்கள் வரை கல்வி பயின்றுவந்தனர். இன்னும், அம்மையார் அங்கு ஏழைமக்கட்கென **மருத்துவச்சாலை** யொன்றும் ஏற்படுத்தினார்; குளிர்காலத்திற் போதுமான உணவும் உடையுமில்லாமல் துன்புறும் நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு உணவும் உடையுமளித்தனர்; பின்னும், தம் மறைநூலாகிய விவிலியநூலை வாங்கி அவ்வூரவர்க்குப் பரிசாக வழங்கி வந்தனர். அவரிருந்த சிற்றூரின் சுற்றுப்புறங்களிலுள்ள ஏழையெளிய மக்கள் எவ்வுதவி வேண்டினும் அதற்காக அம்மையாரது பள்ளிக்கூடத்திற்கே வருவது வழக்கமாயிற்று. ஆதலால் அவர் செய்யும் இச்சிறந்த அறப்பணியின் புகழ் எங்கும் பரவிற்று!

## அம்மைநோயைத் தடுக்க முயற்சி

அம்மையாரிருந்த பிளாஷெட்டிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் [1] **அம்மைநோய்** மிகுதியாய்ப் பரவியிருந்தது. அம்மையார் அதைத் தடை செய்யுமாறு அம்மை குத்தப் பெருமுயற்சி செய்தார். [2] **வில்லன், சிம்ஸ்** என்னும் இரு மருத்துவத் துரைமகனாரும் இவர்க்குதவியாக உழைத்து [3] **உருக்குத்து**வதை எங்கும் பரவச்செய்தனர். இவர் தாமும் அம்மருத்துவர்கள்பால் அம்முறையைக் கற்றுக்கொண்டு தாமாகவே வீடுவீடாய்ப் போய்க் குழந்தைகளை ஆராய்ந்து பார்த்து அவர்கட்கு உருக்குத்தி வந்தார். அதன் பயனாக அவ்வூரிலுஞ் சுற்றுப் புறங்களிலுமிருந்த அம்மைநோய் அறவே ஒழிவதாயிற்று.

---

1. Small-pox 2. Drs. Willen & Sims 3. Vaccination.

ஒரு முறை, பால் விற்றுப் பிழைக்கும் ஒருத்திக்குத் தன் வாழ்க்கைக்குப் போதிய அளவு ஆக்கள் (பசுக்கள்) இல்லாமை கண்டு, அம்மையார் தம் ஆக்களில் ஒன்றை அவளுக்குக் கொடுத்தனர். இது கண்ட அவர்தங் கணவனார் 'அன்பே! இதற்கடுத்த படியாக எதைக் கொடுக்க எண்ணம்!' என்று கேட்டார். இவ்வாறு அம்மையார் பல துறைகளில் ஏழை மக்கட்குத் தங் நலங்களையும் பொருட்படுத்தாது உதவிகள் செய்துவந்தனர்.

# 6. இங்கிலாந்தின் சிறைக்கூட நிலைமை

எலிசபெத் பிரை அம்மையாரின் முதன்மையான நோக்கம் சிறைக்கூடச் சீர்திருத்தமேயாகும். தாங்க முடியாத துயரிற் கிடந்துழலும் சிறையாளர்கட்கு உதவி செய்ய வேண்டுமென்ற அம்மையாரின் இளமைக்கால விருப்பமானது நிறைவேறுங் காலம் அவர்க்கு ஆண்டவனருளால் இப்போதுதான் வாய்த்தது. சிறையாளர்களின் துன்பத்தைப் போக்குமவகையில் எலிசபெத் அம்மையார்க்குமுன் உழைத்த பெரியார் பலர் உளர். அவர்களைப் பற்றி ஒருசிறிது கூறிப், பின் அம்மையாரது சிறைத்தொண்டைப்பற்றி விரித்து விளக்குவாம்.

17-ஆம் நூற்றுண்டின் இறுதியில் [1]**கிறித்து சமயக் கொள்கை வளர்ச்சிக் கழகத்தார்** சிறைச்சாலைகளின் சீர்கேட்டையும் அதனுற் சிறையாளர்கள் படும் பொறுக்கமுடியாத் துன்பங்களையும் நன்காராய்ந்தறிந்து அத் துன்பங்களை நீக்கத் தக்க முயற்சிகள் செய்தனர். அம்முயறசிகள் பயன் தரவில்லை. அதன்பின், [2]**மெதாடிஸ்ட்ஸ்** என்னும் மற்றுமொரு கிறித்து சமயப் பிரிவினர் சிறைச்சாலைச் சீர்திருத்தங்கட்காக முயன்றனர்; முயன்று, சிறையாளர்களின் துன்பங்களைப்பற்றி மிக விளக்கமாகக் கூறும் [3]**இரக்கப் பணிகள்** என்னும் ஒரு நூல் எழுதி வெளியிட்டனர். சிறைச் சீர்திருத்தங்களுக்காக இவர்கள் எவ்வளவோ முயன்றும் பயன் பெறுவதற்கில்லை.

---

1. The Society for the promotion of Christian Knowledge
2. Methodists 3. Works of Mercy

இவ்விரு கூட்டத்தாருங் கைவிட்ட அச் சிறைப் பணியை [1] **ஜான் ஹாவர்டு** என்னும் ஆங்கிலத் துரைமகனார் தொடங்கினார். இவர் 1726-ஆம் ஆண்டு **ஹாக்னி** என்னு மிடத்திற் பிறந்தவர். இவர் இளைஞராயிருந்தபோது ஆங்கிலக் கப்பலொன்றிற் செல்கையில் அதனை எதிர்க்கவந்த பிரான்சுப் போர்க்கப்பற் படையால் பிடிக்கப்பட்டனர். அப்போது அவ் ஆங்கிலக்கப்பலில் இருந்தாரெல்லாரும் பிரான்சுச் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டனர். அவர்களுள் ஹாவர்டும் ஒருவராவர். இவர் அச் சிறைக்கூடத்திற் சிலகால மிருந்தபோது, அங்கே குற்றவாளிகள் மிகக கொடுமையாக நடத்தப்படுவதைக் கண்டனர். அச் சிறையில் நூற்றுக்கணக்கான குற்றவாளிகள் ஆண் பெண் என்னும் வேற்றுமையின்றி, ஒருங்கே இடம் போதாத அறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். இவ்வறைகளிற் போதுமான வெளிச்சமுங் காற்றுங் கிடையா. அங்கு எவ்வித வசதியும் அவர்கட்கில்லை; அவர்கட்குக் குளிப்பதற்கும், துணிகள் துவைப்பதற்கும், குடிப்பதற்குங்கூடப் போதுமானபடி தண்ணீர் தரப்படுவதில்லை. அவர்களின் கைகால்களிற் பிணிக்கப்பட்ட இரும்புச் சங்கிலிகள் சுவரிலிருக்கும் இரும்பு வளையங்களிற் பிணைக்கப்பட்டிருக்கும். அதனால் அவர்கள் அங்குமிங்கும் போக முடியாதவாறு கட்டப்பட்டிருந்தனர். சிறைச்சாலையைக் காண வருபவர்கள் மனம் இரங்கித் தரும் சிறு பொருளை அக்குற்றவாளிகள் சிறைக்காவலளர்களிடங்கொடுத்து வைக்கோல் வாங்கி அதைத் தரையிற் பரப்பி, அதன்மேற் படுத்துக்கொள்வர். இச் சிறைக் காவலர்களிற் பலர் மிகப் பொல்லாதவர்கள்; தப்பி ஓடமுடியாத அவ் ஏழைக் குற்றவாளிகளைச் சில

1. John Howard


வேளைகளில் இக்காவலர்கள் தம விருப்பம்போற் கடுமை யாக ஒறுப்பதுமன்றி, அவர்களைக் கொன்றும் விடுவர். கேட்பாரின்மையால் இக் காவலர்கள் குற்றவாளிகளைப் பலவகையிற் றுன்புறுத்தினர்கள். சிறைக்கூடங்கள் ஊர்ப் புறத்தே தனியிடங்களிலிருப்பதால் அங்கு நடக்குங் கொடுஞ் செயல்களை ஊரவர்கள் தெரிவதற்கில்லை. இத்தகைய சிறைக்கனுப்பப்பட்ட ஹாவர்டு துரைமகனர் அங்கிருந்த போது குற்றவாளிகள் படுங் கடுந்துன்பத்தையும், காவலர் கள் அவ் ஏழை உயிர்கட்குச் செய்யும் பெருந்தீங்குகளையும் நேரிற்கண்டார். கண்டு, இரக்கமே வடிவெடுத்தாற்போன்ற அவர் உளம் நைந்துருகப்பெற்றாராய்த் தாம் வெளிவந்த பின் சிறையாளர்களின் துன்ப வாழ்வினை அறவே ஒழிக்கத் தக்க முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித் தனர்.

அவ்வாறே அவர் வெளிவந்த பின்னர் அம்முயற்சி களில் ஈடுபட்டார். 1773-ஆம் ஆண்டு பெட்போர்டுக்கருகே யுள்ள **கார்டிங்டனில்** அவர் நாட்டாண்மைத் தலைவராக ஏற்படுத்தப்பட்டார். அப்போது, சிறையினர் படுந்துன் பங்களை உலகத்தார்க்கு நன்கறிவிக்கும்பொருட்டு **இங்கி லாந்து, பிரான்சு** முதலிய நாடுகட்குச் சென்று ஆங் காங்குள்ள சிறைக்கூடங்களை அவர் பார்வை யிட்டார்; சிறைக்கூடங்களின் துன்ப நிலைகளை எடுத்துக் காட்டி, 1777-ல், **இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ள சிறைகளின் நிலைமை'** என்னும் நூலொன்று எழுதி அவர் வெளியிட்டனர்; பல நகரங்களிலுள்ள அரசியற்றலைவர் களையும் தக்கார் பலரையுங் கண்டு சிறையாளர் துன்பங்களை மிக விளக்கமாக அவர்கட்கு எடுத்துக் கூறினர். அவர்களி னுதவியால் தம் நகர்க்கருகிலுள்ள சிறைக்கூடங்களில்

அவர் சீர்திருத்தங்கள் சில செய்தனர். ஆனால், இன்னும் மேலான சீர்திருத்தங்கள் செய்து பண்படுத்துவதற்குள் 1790-ஆம் ஆண்டு, அத் துரைமகனார் இவ்வுலக வாழ்வை நீத்தனர். அப்போது அவர் 'தமக்குப் பின் வரும் அருளாளர் எவராயினும் தம் சிறைப்பணியை மேற்கொண்டு செய்வாரென்று நினைக்கிறேன்' என்று கூறிப்போந்தார். அப்பெரியார் கூறியபடியே அவர் துவங்கிய அறப் பணியை, பிரை பெருமாட்டியார் நிறைவேற்றலாயினர்.

# 7. நியூகேட் சிறைச்சாலையின் நிலைமை

18-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் ஆங்கிலநாட்டின் தலைமைச் சிறைச்சாலையாகிய **நியூகேட் சிறைச்சாலை** மற்றைச் சிறைச்சாலைகளைப் போலவே மிக்க சீர்கேடான நிலையிலிருந்தது. இங்குப் போதுமான வெளிச்சமும் நல்லகாற்றுங் கிடையா. நச்சுக்காற்று வெளியே போகவும் நல்ல காற்றுத் தாராளமாய் உள்ளே வரவும் அங்கே போதிய வாயில்கள் அமைக்கப்படாதிருந்தன. அச்சிறைச்சாலை நிறுவப்பட்ட நாள்முதலாக அங்கிருக்கும் ஒடுக்கமான அறைகளில் அடைபட்டுக் கிடந்த சிறையாளர்கள் பலர் மிகுதியாக நோய்வாய்ப்பட் டிறந்துள்ளனர். ஐயகோ! நோய்வாய்ப்பட்ட குற்றவாளிகட்குக்கூடப் படுக்கைகள் கொடுக்கப்படுவதில்லை; குளிர்காயும் தணற் சட்டிக்கு வேண்டும் நிலக்கரியுந் தரப்படுவதில்லை; குடிப்பதற்குப் போதுமான அளவு தண்ணீரும் வழங்கப்படுவதில்லை. 1813-ஆம ஆண்டில், ஐந்நூறு மக்கள் இருக்கத்தக்க அச்சிறையில் எண்ணூற்று இருபத்திரண்டு பேர் அடைக்கப்பட்டிருந்தனர். இது மட்டுமா? சிறைப்பட்டவர்களின் தகுதிக்குத் தக்கபடி அவர்கள் பிரித்து வைக்கப் படவுமில்லை; அதற்கு ஏற்ப அவர்கள் அங்கு நடத்தப் படவுமில்லை. இளைஞரும் முதியோருமான குற்றவாளிகளும், பித்தர்களும், கடன்பட்டவர்களும் ஒருங்கே அடைக்கப்பட்டிருந்தனர். குறும்பு செய்யுங் குழந்தைகளும் அங்கே வைக்கப்பட்டிருந்தனர். அக்காலத்தில், சிறு குற்றஞ் செய்தோர் பெரியோராயினும், சிறியோராயினும் தூக்கிலிடப்படுவது வழக்கம். ஒரு கடையில் கண்



நியூகேட் சிறைச்சாலை

3129



ஞடிக் கதவை உடைத்துச் சிறிது இனிப்புப் பண்டம் திருடிய ஒன்பதாண்டுச் சிறுவனுக்குத் தூக்குத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அறிவு முதிராத அச்சிறுவன் செய்த இச் சிறு குற்றத்திற்காக அவனைத் தூக்கிலிடுதல் எவ்வளவு கடுமையானதாகும்! அதனை யுணர்ந்த அறிவுடையோர் பலர் அவனைத் தூக்கிலிடலாகாதென்று பெருமுயற்சி எடுத்தனர். அதன் பயனாக அச்சிறுவனைத் தூக்கிலிடாமல் சிறையிருப்பாளனாக மாற்றினார்கள். 1813-ஆம் ஆண்டில் [1]**ஸ்டீபென் கிரெலெட்**, [2]**உவில்லியம் பார்ஸ்டர்** என்ற குவேக்கப் பெரியாரிருவர் நியூகேட் சிறைச்சாலையைப் பார்வையிட விரும்பினர். அச்சிறையிலுள்ள பெண் குற்றவாளிகளின் முரட்டுத் தன்மைக் கஞ்சி அச்சிறைச்சாலைத் தலைவர்கள் • அவர்கள் அங்கனுப்ப மறுத்தனர். ஆனால், அப்பெரியாரிருவரும் வற்புறுத்திக் கேட்கவே, தலைவர்கள் அவர்களை அச்சிறைச்சாலைக்குட் போக விடை கொடுத்தனர். அச்சிறைச்சாலையை அவர்கள் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில், பெண்களிருக்கும் பகுதிக்கு வந்தனர். அங்கே அவர்கள் அப்பெண்களிடையே கண்ட காட்சி பொறுத்தற் கரியதாயிருந்தது. அப்பெண்கள் அங்குச் செல்வோரிடம் பெருங்கூக்குரலிட்டுக் கெஞ்சிக் காசு பெற்றுக் குடித்துக் கூத்தாடி அருவருக்கத் தக்க செயல்களெல்லாம் செய்துவந்தனர். இப் பொல்லாக் காட்சிகளைக் கண்ட அவ்விருவரும் ஒன்றுஞ் செய்ய அறியாராய்ச் சிறையைவிட்டு வெளியே வந்துவிட்டனர். வந்தவர்கள் உடனே எலிசபெத் பிரை அம்மையாரிடஞ் சென்று அச்சிறைப்பெண்கள் படுந் துன்பவாழ்க்கையினின்றும் அவர்களை விடுவிக்க உதவிசெய்யுமாறு

1. Stephen Grellet 2. William Forster

## முதன்முறை நண்பருடன் சிறையைப் பார்வையிடல்

அவ் விருவரின் வேண்டுகோட் கிணங்கி பிரை அம்மை யார் 1813-ஆம் ஆண்டு [1] ஹானு பக்ஸ்டன் என்னும் மாது டன் நியூகேட் சிறைச்சாலையைப் பார்வையிடச் சென் றனர்; சென்று அச்சிறைச்சாலையில் மூந்நூறு பெண் கள் தம் குழந்தைகளோடு பெருங் கூட்டமாய் அடைக் கப்பட்டிருப்பதைக் கண்டனர். அப்பெண்கட்கும், குழந் தைகட்கும் யாதொரு வசதியும் அளிக்கப்படவில்லை. அவர்களே தமக்குக் கொடுக்கப்படும் நல்லவையல்லா உணுப் பொருள்களைச் சமைத்தும், தம் உடைகளை வண்ணு னின்றித் தாமே துவைத்தும், குளிர்ந்த வெறுந் தரையிற் படுத்துங் காலங்கழிப்பதைக் கண்டனர். அவர்கட்குப் பய னுள்ள வேலை ஏதுங் கொடுக்கப்படவுமில்லை. வேலை ஏது மின்மையால், ஒருவரோடொருவர் ஓயாமற் கலாம் விளைத் துக் கொண்டு முரட்டுத்தனமாய் நடந்துகொள்ளும் பொல் லாக் காட்சிகளைக் கண்டு, அருளும் இரக்கமும் ஓர் உருவா யமைந்த அம்மையார் பெரிதும் வருந்தினர். அறியாமை யிலுந் துன்பத்திலுங் கிடந்துழலும் இச் சிறைமாதர்களை முன்னேற்றுவதெப்படி என்று அம்மையார் ஆழ்ந்தாராய்வா ராயினர்; சிறையை விட்டு வெளியே வந்தபின்னரும், அச் சிறைமாதர்களிடங் கண்ட இரங்கத் தக்க காட்சி அவர் மனதைவிட் டகலவில்லை. அவர்களைத் திருத்தும் வழிவகைகளை அல்லும் பகலும் அவர் ஆராய்ந்து கொண்டே யிருந்தனர்.

## மறுமுறை தனியராய்ச் சிறைக்குச் செல்லல்

இரண்டாம் முறை எலிசபெத் பிரை அம்மையார் நியூகேட் சிறைச்சாலைக்குத் தாம் தனியே போய்ப் பார்க்க

1 Hannah Buxton



நியூகேட் சிறைக்குள் செல்லல்

[பக்கம் 36

வேண்டு மென்று அச்சிறைச்சாலைத் தலைவரைக் கேட்டனர். அதற்கவர் "அம்மையே! அங்குத் தனியே செல்வது நல்லதன்று; அவ்வாறு செல்லத் துணிந்தாலும் பணப்பையையோ, கைக்கடியாரத்தையோ கொண்டு போதல் கூடாது" என்றனர். அதுகேட்ட அம்மையார் "ஐயா! வணக்கம். நான் எதற்கும் அஞ்சவில்லை; என்னுடைய தொன்றும் பறிபோகாது" என்று விடை யிறுத்தனர். சிறைத்தலைவர் அம்மையாரது அஞ்சா நெஞ் சிற்காக வியந்து அவரைச் சிறைக்குள் போகக் கட்டளை யிட்டனர். அம்மையார் சிறைச்சாலைக்குட் சென்றதும் அப் பெண்களெல்லாரும் அவரைச் சூழ்ந்துகொண்டு பேரிரைச்ச லிட்டனர். அன்பும் பொறுமையுமே சிறப்பாயமைந்த பிரை பெருமாட்டியார் அவர்களிடும் பேரிரைசசலைக் கண்டு இன்னது செய்வதென்றறியாது சிறிதுநேரம் ஒன்றும் பேசாதிருந்தனர்; பின்னர், தம் கையிலிருந்த **விவிலிய நூலைத்** திறந்து சிறந்த கதையொன்றை அவர்கட்கு எடுத்துச் சொல் லத் தொடங்கினர். தொடங்கியவுடன், அச்சிறைப் பெண்க ளெல்லாரும் பாவைகள்போல் அசைவற்று நின்று மிக்க ஆவலோடு அக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கதைபடித்து முடிந்தபின்னர், அம்மையார் அவர்களை நோக்கி, "அன்பர்களே! நீங்களிங்கே துன்பமான நிலையி லிருக்கின்றீர்கள். உங்களுக்குப் போதுமான உணவும் உடைகளுமில்லை; எவரேனும் இங்கு வந்து உங்கள் வருத் தங்களை நீக்குவது உங்கட்கு விருப்பந்தானா?" என்று கேட் டனர். அதற்கவர்கள், "அம்மையே! எங்களை இங்கு ஏனென்று கேட்பாரில்லை; எங்களுக்கு உதவிசெய்வார் யாருளர்!" என்று கூறி வருந்தினார்கள். அதற்கம்மை யார், "உங்களுக்கு உதவிசெய்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கின்றேன்; நீங்கள் நான் சொல்லுகிறபடி செய்

வீர்களாயின், நான் உங்கட்குத் துணைநிற்பேன்" என்று கூறினர். அதற்கவர்கள், 'தங்கள் சொல்வழி நிற்போம்' என்று விடை கூறித் தம் பிள்ளைகளுடன் அம்மையாரைச் சுற்றி நின்று, அவர் தமக்கு உதவி செய்ய மறுபடியும் அங்கு வருவரோ என்று ஐயமுற்று மனங் கலங்கி அழுதனர். அப்போது அம்மையார், "வருந்தாதீர்கள்; உங்கள் பிள்ளைகள் நல்லறிவு பெற வேண்டுமாயின், அவர்கட்குக் கல்வி கற்பிக்கவேண்டும்; அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய முயல்கின்றேன்" என்று அவர்கட்குக் கூறி வெளிப் போந்தனர். ஆயினும், மீண்டும் உடனே அம்மையார் நியூகேட்டுக்குப் போக முடியாதவாறு பலவகையான அல்லல்கள் அவர்க்கு ஏற்பட்டன. இக்காலத்திற்றான் அவர்க்குப் பத்தாவதாக ஓர் ஆண் மகவு பிறந்தது; எலிசபெத் என்னும் அவருடைய அருமை மகள் தன் ஐந்தாம் ஆண்டில் இறந்தாள். தம் அருமைக் குழந்தையின் பிரிவு அம்மையார்க்கு ஆற்றொணாத் துயரத்தை விளைத்தது. இவற்றால் அம்மையார் தம் வீட்டை விட்டு வெளியே போகமுடியாதிருந்தபோதுங் கூட நியூகேட் சிறைப்பெண்களுக்கு அவர் வீட்டிலிருந்தபடியே உடைகள் தைத்து அனுப்பிவந்தனர்.

## மூன்றும் முறை சிறைக்குப் போதல்

1819-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அம்மையார் தம் ஆண்மக்கள் மூவரையும் இலண்டன்மாநகர்க் கல்விச் சாலைக்குக் கல்வி கற்க அனுப்பி விட்டனர். மற்றைப் பெண் மக்கள் மூவரைத் தம் தங்கைமாரிடம் இருக்குமாறு செய்து விட்டு, நியூகேட்டிற் பணிசெய்யும் விருப்பத்தோடு தங் கணவருடனும் ஏனைய குழந்தைகளுடனும் இலண்டன்மா

3129



நகர்க்குச் சென்றனர். சென்று, அம்மையார் நியூகேட் சிறைச்சாலையைப் பார்க்கப் போயினர். அங்குள்ள குழந்தைகள் நல்ல உணவும் உடையுங் காற்றுமில்லாமல், ஒரு வேலையுமின்றி அலங்கோலமா யிருப்பதை அம்மையார் முன்னமே கண்டிருந்தனர். ஆகலான், இப்போது அக் குழந்தைகளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தால் அக் குழந்தைகளின் தாய்மார்கள் திருந்துவார்களென்று அவர் எண்ணினர். எண்ணி அவர்களை நோக்கி, "யான் முன் கூறியபடி உங்கள் குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் வைக்கலாமென் றிருக்கின்றேன்; அதற்கு நீங்களும் உதவியா யிருப்பீர்களா?" என்று கேட்டனர். அதற்கவர்கள், "அத்தகைய உதவியைத் தாங்கள் செய்வீர்களாயின் பெரும் புண்ணியமாகும்" என்று அழுது கூறினர்.

## நியூகேட் சிறையில் பள்ளிக்கூடம் நிறுவல்

அம்மையார் சிறையாளர்கட் கிரங்கி நன்மை செய்யப் புகுந்தமை கண்டு அச்சிறைச்சாலைத் தலைவர்கள் அவரைப் பாராட்டாமலிருக்க முடியுமா? முடியாதன்றோ! அவர் கேட்டதற்கிணங்கி அத்தலைவர்கள் அச் சிறைச்சாலையின் மற்றோர் அறையைப் பள்ளிக்கூடத்திற்கென்று கொடுத்தார்கள். அம்மையார், ஆண்டவனை நினைந்து அதிற் பள்ளிக்கூடம் ஒன்று நிறுவினர்; அதில் [1] **மேரி கோனர்** என்னும் சிறைமாது ஒருவரையே ஆசிரியராக அமர்த்தினர். அம்மாது ஒரு கைக்கடியாரந் திருடியதற்காகச் சிறையிலடைக்கப்பட்டவள். அம்மையாரின் இரக்கமுள்ள இன்சொற்களால் அவள் உள்ளந் திருந்தப் பெற்றாள். ஆகலான், அவள் அம்மையார் கற்பித்தவாறே நெறிவழு

1. Mary Conner.

வாமல் அப்பள்ளிக்கூடத்தில் மிக ஒழுங்காகக் கல்வி கற்பித்து வந்தாள்.

## சிறைச் சீர்திருத்தக் கழகம் அமைத்தல்

அம்மையார் முயற்சியால் இப்பள்ளிக்கூடம் சீரிய முறையில் நடைபெறுவதாயிற்று. சிறை மாதர்களின் குழந்தைகள் அப் பள்ளிக்கூடத்தில் ஒழுங்காகக் கல்வி கற்று வந்தனர். இன்னும் மேலான முறையில் இச் சிறைக்கூடத்தைக் கொணரும்பொருட்டு கற்றறிவுள்ள சீமாட்டிகள் பலரைச் சேர்த்து அம்மையார் ஒரு மாதர் கழகம் நிறுவினர். அதில், "நண்பர் கழக"த்திலிருந்து பதினொரு உறுப்பினரும், சமய விரிவுரையாளர் ஒருவரின் மனைவியாருஞ் சேர்ந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அச் சிறைச் சாலையை முறையாகப் போய்ப் பார்த்து வருமாறும், அப் பள்ளிப் பிள்ளைகட்குப் பாடஞ் சொல்லி வருமாறும் அம்மையார் ஏற்பாடு செய்தனர். இப் பெருமாட்டிகள் தங்களுக்கு வேண்டிய உணவுகளைக் கையிற்கொணர்ந்து அங்கு நாள்முழுதும் அச்சிறை மாதர்களொடு தங்கியிருந்து அவர்கட்கு நல்லறிவு புகட்டியும், கல்வி கற்பித்தும் வந்தனர். சிறைப்பெண்களெல்லாருங் கல்வி கற்று அறிவுடையவர்களாக வேண்டுமென்று பிரை அம்மையார் கூறிவந்தமையால் அப் பெண்களிற் பலர் அப் பள்ளியிற் சேர விரும்பினார்கள். முதன்முதல் சிறுவர்களுக்கென்று ஏற்படுத்திய அச் சிறுபள்ளிக்கூடமானது அம்மையாரின் பெருமுயற்சியால் மிக விரைவில் பெரிய பெண்களுஞ் சேர்ந்து படிக்கத் தக்க நிலையில் அமைந்தது.

இன்னும், குற்றவாளிகள் அவரவர்கள் குற்றங்களுக்குந் தகுதிக்கும் ஏற்பப் பல்வேறு பிரிவினராகப் பிரித்து



நியூகேட் சிறையில் விவிலிய நூல் படித்தல்

[பக்கம் 4]

வைக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவினர்க்குங் கல்வி கற்பிக்க அச்சிறை மாதர்களிடையே கல்வி யறிவுள்ள மாதர்கள் சிலர் ஆசிரியர்களாகவுந் தலைவியர்களாகவுந் தெரிந்தெடுக்கப் பட்டனர். அத் தலைவியர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு பிரிவினர்க்குக் காலையில் தம் மறையாகிய விவிலிய நூலைப் படித்துக்காட்டுவர். பின் எல்லாரும் அமைதியாயிருந்து ஆண்டவனை வழிபடுவர். எழு நாட்களுக் கொருமுறை பிரை பெருமாட்டியார் அங்குக் காலையிற் சென்று அம்மாதர்கட்கு அறிவுரைகள் கூறி, விவிலிய நூலும் படித்துக் காட்டிவருவர். இவ்வாறு அம்மையார் நிறுவிய அச் **சிறைப் பள்ளிக்கூடம்** செவ்வனே நடந்து வருவது கண்ட எல்லாரும் பெருவியப் பெய்தினர்.

ஆனால், இலண்டன் மாநகர முறைமன்ற [1]நடுவர்கள் அம்மையாரை அணுகி, "நீவிர் செய்யும் பணி பயன் தரத் தக்கதன்று; தீயவழியிலொழுகும் அடங்காப் பிடாரிகளான இச் சிறைமாதர்களை அரசியற் சட்ட வாயிலாக ஒறுக்காமல், வேறு வழியாகத் திருத்துதல் இயலாது" என்று கூறினர். அதற்கு அம்மையார், "அதைத் தான் செய்து பார்ப்போமே" என்று அமைதியாக விடை பகர்ந்தனர்.

## சிறையில் தொழிற்சாலை அமைத்தல்

அம்மையார் சிறையில் பள்ளிக்கூட மட்டும் ஏற்படுத்தியதல்லாமல் இன்னும் அப் பெண்களுக்குத் தொழிற்சாலை ஒன்றும் நிறுவினர். அங்கிருந்த சிறைமாதர்களும் சிறுவர்களுமாகச் சேர்ந்து, [2]**ஆஸ்திரேலியா**விலுள்ள [3]**பாட்டனி பே** என்னுமிடத்திற்கு நாடு கடத்தி அனுப்பப்படுங் குற்றவாளிகளுக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் உடை

1. Judges. 2. Australia 3. Botany Bay

களை செய்து தைத்தார்கள். இக் குற்றவாளிகளின் ஆண்டு முதிர்ச்சிக்கும், நிலைமைக்கும் ஏற்றவாறு கல்விப் பயிற்சி, செய்தற்றொழில், பின்னல், மெத்தைகள் உடைகள் தைத்தல், சமையற்றொழில் ஆகிய இவை கற்பிக்கப்பட்டன. காட்டு விலங்குகள்போல் அடைபட்டுக் கிடந்த அம்மாதர் அம்மையாரது நன் முயற்சியால் நற்குண நற்செய்கை யுடையவர்களாயினர். இதுவுமன்றி, அவர்கள் அழுக்கில்லாமல் துப்புரவான உடைகளணிந்து ஏதேனும் ஒரு பயனுடைய தொழிலிலும் ஈடுபடுவாராயினர். சொல்லொணு அழுக்கும் புழுதியும் படிந்திருந்த அச்சிறைக்கூடச் சுவர்கள் வெண் சாந்து பூசப்பெற்றுத், தரைகள் துப்புரவாக வைக்கப் பட்டிருந்தன. காற்றோட்டத்திற்கும் வெளிச்சத்திற்கும் ஏற்ப வாயில்கள் அங்கே அமைக்கப்பட்டன. அம்மையார், அப்பெண்களிடத்திற் கண்ட கட்குடித்தல், சீட்டாடல், ஆணையிட்டுப் பேசுதல் முதலிய தீய செயல்களனைத்தையும் தகாதவையெனக் கூறி விலக்கினர். அம்மையாரின் அறிவுரைகளின்படியே அச்சிறை மாதர்களுங் குழந்தைகளுஞ் சீர்திருந்துவாராயினர்.

ஒருநாள் இலண்டன் நகராளுமன்ற உறுப்பினர்களும், குருமார்களும் நியூகேட் சிறைச்சாலையைப் பார்வையிட வந்திருந்தனர். அங்கு அம்மையார் செய்திருந்த சிறந்த சீர் திருத்தங்களைக் கண்டு வியந்து அவரைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தனர். பிரை பெருமாட்டியார் உலகத்தார் புகழும் புகழ்ச்சிக்காகப் பாடுபடவில்லை. எவரேனுஞ் செய்தித் தாள்களில் தம்மைப் புகழ்ந்தெழுதி யிருப்பதைக் கண்டால் அவர் அறுமுதற் சில நாட்கள் சிறைப்பணிக்குச் செல்லாதிருப்பர்.

# 8. சிறைக்கப்பற் சீர்திருத்தம்

நியூகேட் சிறை மாதர்களை ஆஸ்திரேலியாவில் பாட்டனிபே என்னுமிடத்திலுள்ள [1]**குற்றவாளிகள் இருப்பிடத்**திற்கு அவ்வப்போது நாடுகடத்தி அனுப்புவதுண்டு. தம் நாட்டைவிட்டுப் போக நேர்வதால் குற்றவாளிகள் கப்பலுக்குப் புறப்படுமுன் தம் கையிலகப்படும் பொருள்களையெல்லாம் சினத்துடன் நொறுக்கி எறிவார்கள். காட்டு விலங்குகளைப் பிடித்துக் கப்பலேற்றினால் எவ்வாறிருக்குமோ அவ்வாறே அம்மாதர்களைக் கப்பலேற்றும்போது பேரிரைச்சலா யிருக்கும். அக் காலத்தில், சிறைக் காவற்றலைவர்களனைவரும் சிறையாளர்களைக் கப்பலுக்கனுப்பும நாள் வந்தால் மிக அஞ்சுவார்கள். பிரை பெருமாட்டியாரும் அவர்தம் கூட்டத்தாருஞ் செய்த பெருந்தொண்டிற்குப் பிறகு, அந்நாள் நிகழ்ச்சிகள் முற்றிலும் மாறுதலடைந்தன. சிறைக்கப்பற் றலைவர்களையும், அரசியற் றலைவர்களையும் அம்மையார் கண்டு பாட்டனிபேக்கு அனுப்பும் சிறை மாதர்களுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் சிறைக் கப்பலில் தக்க ஏற்பாடுகள் செய்யுமாறு வேண்டினர். சிறையாளர்கள் போகும் கப்பல்களின் மேல்மூடியைத் தவிர, மற்றப் பக்கங்கள் திறந்தபடியே யிருக்கும். அழுக்கும் ஈரமுங் குளிர்ச்சியு மிக்க அக்கப்பற் றட்டில் சிறை மாதர்கள் தம் அருமைக் குழவிகளோடு போதுமான உணவும் உடையுமின்றிப் பெருங் கூட்டமாக வைக்கப்படுவர். இக்கொடுங் காட்சியினை அம்மையார் கண்டு இதனைச் சீர்திருத்தப் பெருமுயற்சி செய்தனர். அம்மையார் வேண்டுகோளின்படி சிறைக்கப்பல்கள் துப்புரவாக வைக்கப்

---

1. Convict Settlement in Australia

பட்டன ; மற்றும், உணவு முதலிய வசதிகளும் அவர்கட்கு அங்கே ஒழுங்காகத் தரப்பட்டன. இலண்டன்மா நகரிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குப் போக ஏறக்குறைய ஐந்தாறு திங்கள் செல்லும். இவ்வளவு நீண்ட காலம் சிறை மாதர்கள் கப்பலில் வீண்காலம் போக்காதவாறு, மெத்தைகள், துணிகள் தைத்தல், பூவேலை செய்தல், செய்தவற்றைக் கப்பலினின்றும் இறங்கியபின் விற்றுப் பொருள் பெற்று அதனைத் தஞ்செலவிற்குப் பயன்படுத்திக்கொள்ளுதல் ஆகிய ஏற்பாடுகளை அவர் செய்திருந்தனர்; இன்னுங் கப்பலில், அவர்கள் விவிலிய நூல் கற்கவும், கடவுளை வழிபடவும், தங்கள் உடைகளைத் தாங்களே வெளுத்துக்கொள்ளவும், உணவு சமைத்துக்கொள்ளவும் ஒழுங்குகள் செய்திருந்தனர் ; அங்குக் குழந்தைகட்குப் பள்ளிக்கூடம் அமைத்து, அதனை ஒழுங்காக நடத்த ஆசிரியரொருவரையும், அச்சிறை மாதர்களை மேற்பார்க்க ஒரு மாதையும் அவர்களொடு அக்கப்பலில் அனுப்பினர். இவ்வளவு சிறந்த ஏற்பாடுகள் அம்மையாரால் செய்து முடிக்கப்பட்டமையின், பெண் சிறையாளர்களை பாட்டனிபேக்கு அனுப்பப்படும் நாள் முற்றிலும் மாறுதலடைந்து சிறந்து விளங்குவதாயிற்று. அன்று அச்சிறைப் பெண்களோடு அம்மையார் அக்கப்பலுக்குச் சென்று, அதில் அவர்களை ஏற்றிவிட்டு, அவர்களுக்கு அறிவுரைகள் கூறி, அவர்களின் முன்னேற்றத்திற்காகக் கடவுளை மிக உருக்கமாக வேண்டி வழிபட்டனர். அவ்அறிவுரைகளைக் கப்பலோட்டிகளுங்கூடக் கப்பலின் பாய்மரக் கயிற்றைப் பிடித்தபடியே நின்று கேட்டு மனமுருகப் பெற்றனர். அஞ்ஞான்று அச்சிறைக் கப்பலிலிருந்த பெண்கள் கூட்டம் சிறந்த அறிஞர் கூட்டத்தை ஒத்து அமைதியாயிருந்தது. அவர்கள் தம் நண்பர்களிடம் உளநிறைந்த நன்றியும் அன்புங் காட்டி

விடைபெற்றுக் கொண்டு குழப்பமின்றிச் சென்றனர். இத்தகைய சீரிய நிலையிற் சிறைமாதர்கள் செல்வதைக் கண்ட அரசியற் றலைவர்கள், சிறைப் பெண்களை மேற்பார்ப் பதற்கு ஒரு சிறு காவற்படையை மட்டும் அனுப்பினாற் போது மென்று நினைத்தனர். அம்மையார் சீர்திருத்த முயற்சிகளுமுன் சிறைப்பட்டவர்களைப் பாட்டனிபேக்கு அனுப்பும்போதெல்லாம் காவற் படைகள் பல அவர்களை அடக்கியாள்வதற்கு அனுப்பப்பட்டு வந்தன.

சிறைக் கப்பல்களைப் பார்வையிடப் போகும்போது அம்மையார் தமக்கு வரும் இடுக்கண்களைப் பொருட்படுத் தாது சென்று வருவர். பின்வரும் நிகழ்ச்சி அதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்: "ஒருநாள் பெரும் புயற்காற்றுக்கு எதிராகப் படகு ஒன்று வழிதப்பிப் போய்க் கொண்டிருந் தது. அப்படகில் "நண்பர் கழக"த்தைச் சார்ந்த மாதரா ரிருவர் இருந்தனர்; யான் இளைஞனையினும், "நண்பர் கழக"த்தாரின் அடக்கம், அறிவு, பொறுமை இவைகளைக் கண்டு பாராட்டு மியல்புடையேன்; நான் அப்படகிலிருப் போர் பக்கமாக ஒரு கயிற்றை வீசி எறிந்து சிறிது நேரத் திற்குள் அவர்களை என் கப்பலில் ஏற்றிக்கொண்டேன். அவர்கள் நான் செய்த இவ்வுதவிக்காக மிகவும் நன்றி கூறினர். அவர்கள் முகத்தில் உயர்ந்த குணங்களின் ஒளி காணப்பட்டது. இதுவரையிற் கடவுட் பற்றுடைய கூட்டத் தாரிடம் எனக்கு விருப்பம் எழுவதில்லை. ஆனால், இவர்க ளிடம் அத்தகைய சிறந்த குணமுங் கடவுட் பற்றும் அமை யப் பெற்றிருக்கின்றமை கண்டு, இவர்களை நான் நன்கு மதிக்கலானேன்; வாழ்க்கையின் நலன் துய்க்க வேண்டிய தம் இளமைக் காலத்திலே சிறு படகில் ஏறி மழையில் நனைந்து அல்லற்பட்டுவரும் இவர்கள் யாரோ என்றெண்ணி

னேன். அப்போது, அம்மையார் தாம் இன்றுரென்பதை எனக் கறிவித்தனர்; பின், தாமுந் தம் நண்பி யொருவரு மாக [1]கிரேவ்ஸ் எண்ட் என்னுமிடத்திற் பெண் சிறையாளர் களைக் கப்பலேற்றிவிட்டு விடைபெற்று வந்ததைப்பற்றியும், சிறையாளர்களின் துன்ப வாழ்க்கையைப் பற்றியும் மிக உருக்கமாகக் கூறினர்; அவற்றைக் கேட்ட யானும் மனம் உருகப் பெற்றேன். அந்நான்று, அவர் மேற்கொண் டுள்ள அறப்பணிக்கு என்னுலியன்ற உதவி செய்வதாகக் கூறினேன்" என்று [2]இராம்ஸ்கேட் துறைமுகத் தலைவர் கூறுகிருர்.

## சிறைமாதர்களின் கடிதங்கள்

அம்மையார் நியூகேட் சிறைச்சாலையைச் சீர்திருத்தத் தொடங்கிய சில திங்களில் பாட்டனிபேக்குப் புறப்பட வேண்டிய சிறையாளர்களின் கூட்டமொன்று சிறைக் கூடத்தில் நடைபெற்றது. அதில் அம்மையாருடைய அறி வுரைகளால் நல்லறிவு பெற்றுத் தாம் செய்த குற்றங்களை யுணர்ந்த மாதர் சிலர் அம்மையார்க்கு எழுதிய உருக்க மான கடிதங்கள் பலவற்றுள் ஒன்று பின்வருமாறு:—

**மாட்சிமை தங்கிய அம்மையே!**

மிகக வெட்கத்துடனும் வருத்தத்துடனும் நாங்கள் இக் கடிதத்தைத் தங்கட்கனுப்புகிருேம். நாங்களும் எங்க ளுடனிருக்கும் ஏனைச் சிறை மாதர்களும் எங்கள் குண வேற்றுமையாற் குற்றங்கள் செய்து அதனுல் ஒறுக்கப்பட் டிருப்பதற்காக நாங்கள் வருந்துகின்ருேம். எங்கள் துய ரைப் பேரன்புடன் ஏற்று, எங்கட்குச் சிறந்த நண்பராய

1. Graves End. 2. Ramsgate.

எம்மிடம் பேரிரக்கங் காட்டுந் தங்களிடத்தில் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறோம். தங்கள் அறிவுரைகளால் நாங்கள் எங்கள் குற்றத்தை உணர்ந்ததுமன்றித் தங்களிடம் என்றும் மறவா நன்றியொடு இக்கடிதம் தங்கட்கு வரைகின்றோம். இன்னும், கால வேற்றுமையால் நாங்கள் செய்த குற்றங்களைத் தாங்கள் பொறுத்துக்கொள்வதுமல்லாமல், பொதுமக்கள் எங்களிடங் கொண்டிருக்குந் தீய எண்ணத்தைத் தவிர்த்து, அவர்களின் நல்லெண்ணத்திற்கு எங்களை உரியவர்களாக்குவீர்களென்னும் முழு நம்பிக்கையுடன் இக் கடிதம் எழுதினோம். மிக்க வருத்தத்துடனும், பணிவுடனும் இதனை முடிக்கும்,

தங்களன்புள்ள,

சிறையாளிகள் பதினொருவர்.

[1] ஹாரியட் ஸ்கெலிடன் என்னும் இன்னுமொரு சிறை மாது பிரை அம்மையார்க் கெழுதிய கடிதமும் இங்குக் குறிப்பிடத்தக்கது :—

"அருமையான அம்மையே! தங்கட்குந் தங்கள் நண்பர்கட்கும் யான் மிகவும நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவளென நினைந்து இக்கடிதத்தைத் தங்கட் கெழுதுகின்றேன். நான் நியூகேட்டில் சிறைப்பட்டிருந்தபோது தாங்களுந் தங்கள் நண்பர்களும் எங்கட்கு நல்லறிவுரைகளைப் புகட்டியதற்கு மிகவும் நன்றியுடையேன். தாங்கள் 1817-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இறைவனிடம் எப்பொருட்டு வேண்டிக் கேட்ட முறையீடானது என் மனதில் மிகவும்

1. Harriet Skeleton

ஆழ்ந்து பதிந்தது. தாங்கள் அன்று கூறியதை இன்று நேரே கேட்பதுபோல் உணர்கின்றேன். "நாம் கண்ணுற காணுதபோதும் நம்முடைய செயல்களைக் கடவுள் காண்கின்ருர். நம் செவிகள் கேளாதவற்றை அவர் கேட்கின்ருர்" என்னுங் கடவுளுண்மைகளைத் தங்கள் அறிவுரைகளால் அறியும் பேறு பெற்றேன்.

என் அருமை அம்மையே! தங்களிடம் இன்னென்று கூறுகின்றேன். நியூகேட் சிறைக்கூடத்தில் தாங்கள் கால்வைத்த நாளே நான் கடைத்தேறும் நாளாயிற்று. அறியாமை யிருளிற் படிந்துகிடந்த என் உள்ளத்தில் அன்றே இறைவனைப்பற்றி ஓர் ஒளி தோன்றியது. இனிமேலாயினும், இறைவனதருளுக்கு யான் ஆளாகக் கடவேன். யானடைந்துள்ள இப்புதிய மாற்றத்தை உலகினர்க்குத் தெரிவித்துத் தங்கள் அரிய தொண்டினை அவர்க்கு மெய்ப்பிக்குமாறு வேண்டுகின்றேன்."

இக்கடிதத்திற்கு அம்மையார் எழுதிய விடை :—

"இழிந்த நிலையினையுஞ் சிறைத் துன்பங்களையும் பெண்களுக்கு உண்டுபண்ணுந் தலைமையான செயல்கள் இரண்டு. அவை : குடியும் ஒழுக்கக் கேடுமே ஆகும்; அவ்விரண்டினின்றே மற்றைத் தீமைகளெல்லாம் பிறக்கின்றன" என்பதே.

இதனுற் குடி ஆண்மக்களுக்கே பெருந்தீங்கினை உண்டு பண்ணுவதானுல், பெண்மக்களுக்கு அஃது எத்துணைப் பெருங் கேட்டினை யுண்டுபண்ணு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பெண்மக்கள் குடியினுல் தம் அரிய பெண் பிறவிக்குரிய எல்லா நல்லியல்பு

களையும் இழந்துவிடுகின்றனர். எவ்வாறெனில், குடியினால் அவர்கள் ஒழுக்கங் குன்றுதலொடு வறுமையும் அடைகின்றனர். வறுமை அடையவே, வீட்டிலுள்ள அரிய பண்டங்களை விற்றுக் குடிக்க அவர்கள் முன்வருகின்றனர். அதுவும் போதாதாயின், பிறர்பொருளைக் கவரவுந் துணிகின்றனர். பிறர்பொருளைக் கவரும்போது அப்பொருட்குரியார் அவர்களைக் கண்டுபிடித்துச் சிறைக்கனுப்பி ஒறுப்பதை நாம் கண்டு வருகின்றோம். ஆகலான் குடியும் ஒழுக்கக் கேடும ஆண் பெண் இருபாலார்க்குந் தீராப் பழியினையும் பெருந் தீங்கினையும் உண்டுபண்ணுகின்றன என்பதை நம்பிரை பெருமாட்டியார் அச் சிறைமாதர்களின் உள்ளத்திற் பதியுமாறு அடிக்கடி எடுத்துக்கூறி அறிவு புகட்டிச் 6

3129

# 9. அம்மையார் அறப்பணிகளைப் பற்றிய பெரியார் நற்கருத்துக்கள்

அம்மையார் செய்துவரும் நியூகேட் சிறைப் பணியைப் பாராட்டிப் பல்வேறு நாடு நகரங்களினின்றும் ஏராளமான கடிதங்கள் அம்மையார்க்கு வந்து குவிந்தன. அரசியலாரும் ஏனைப் பெரியார்களும் நியூகேட் சிறைச்சாலையைப் பார்வையிட வந்தனர். அம்மையாரது தொண்டிற்குப் பின் [1] **பாராளுமன்ற மேல் அவையினர்** அச்சிறைமாதர்களின் நிலையை ஆராய்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டனர். அது வருமாறு :—

"நியூகேட்டில் சிறைமாதர்களுக்காக எலிசபெத் பிரை பெருமாட்டியாரும் அவர்தம் நண்பர்களுஞ் சேர்ந்து செய்த பணி பெரும் பயன் அளித்துள்ளது. இது மிகவும் போற்றத்தக்க தாகும். அவர்கள் முயற்சியால் பள்ளிக்கூடம் ஒன்று நடைபெறுகின்றது; அப் பெண்கள் மிக அமைதியாகவுஞ் சுறுசுறுப்பாகவும் வேலை செய்து வருகின்றனர். அம்மையாருடைய தன்னலமறுப்பும் விடாமுயற்சியுமே அப்பெண்கள் சீரிய நிலையை யடைதற்குக் காரணமாகும்."

இன்னும், பாராளுமன்ற மேல் அவையில் [2] **மார்க்குவிஸ் ஆஃப் லான்ஸ்டௌன்** என்பார் அம்மையாரைப் பற்றிப் பாராட்டிப் பேசியதைக் கேட்டோர் பலருள் ஒரு மாது, "திருமதி பிரை பெருமாட்டி வானுலகிலிருந்து இவ்வுலகிற்கு இறங்கிவந்த ஒரு தெய்வமாது என்றே சொல்லவேண்டும். ஏனெனில், துன்பமுந் தீநெறி

1. House of Lords 2. Marquis of Lansdowne

3129



யும் நிறைந்த அச் சிறைக்கூடத்திற் புகுந்து இவர் தமது பேரிரக்கத்தின் வன்மையாலும், கவர்ச்சியாலும் சிறையாளர்களை வியப்படையும் முறையிற் சீர்திருத்தினார்" என்று அம்மையாரின் சிறைப் பணியை மிகவும் வியந்து புகழ்ந்தார். இது கேட்ட பெரியார் பலரும் நியூகேட் சிறைச்சாலையைப் பார்க்கப் பெரிதும் விழைந்தனர்.

**அமெரிக்கா**வினின்றும் வந்த **அமைச்சர்** (மந்திரி) ஒருவர், "இரண்டு நாட்களுக்கு முன்னே இலண்டனில் மட்டுமன்று, இங்கிலாந்து முழுமையிலும் அரியதொரு செய்தி கண்டேன். **வெஸ்ட்மின்ஸ்டர் கோயில், இலண்டன் கோபுரம், பிரிட்டிஷ் கண்காட்சிச் சாலை, பாராளுமன்றம்** ஆகிய இவை அனைத்தும் அப் புதுமையை நோக்க மங்கித் தோன்றுவவாயின. நியூகேட்டில் பிரை அம்மையாரின் வியக்கத் தக்க பணியும் அதன் சிறந்த பயனுமே நனிசிறந்த அச் செய்தியாகும். உண்மைக் கிறித்தவக் கொள்கையின் வன்மையானது அத்தகைய தீய சிறைச்சாலை மக்களையுஞ் சீர்திருத்தும் என்னும் அரிய உண்மையை நியூகேட் கண்கூடாகக் காட்டுகின்றது" என்று கூறியுள்ளார்.

'**நியூகேட் கிரானிக்கிள்**' என்ற செய்தித் தாளின் இதழாசிரியர் கூறுவதாவது :—

"அஞ்சத் தக்க பேரிடையூறுகளிடையே பிரை பெருமாட்டியார் அடைந்த வெற்றியானது மிகவும் பாராட்டத் தக்கது. தோல்வி யடைதலையே எதிர்பார்த்திருந்த அவ்விடத்தில் அம்மையார் விடாமுயற்சியுடன் உழைத்து வெற்றிபெற்றனர். வேலையின்றி வாளாவிருந்தோரை அரிய வேலைகளில் ஈடுபடுத்தி, அவர்கள் ஒழுங்காக உட்கார்ந்து தைத்தல், பின்னல் முதலிய வேலைகளைச் செய்துவருமாறும்,

பார்ப்பதற்கு அழுக்கும் புழுதியும் படிந்து கிடந்த அச் சிறைக் கூடத்தைத் துப்புரவாயும் வெண்சாந்து பூசித் தூய்மையாக விளங்குமாறுஞ் செய்த அம்மையாரது ஒப் பற்ற செயல் வியக்கற் பாலதாகும்" என்பதே.

"[1] **நேர் முகமாய்க் கண்ட செய்திகள்**" என்ற கட்டுரை யில் [2] **டெய்லர்** துரைமகனார் அம்மையாரைப் பற்றிக் கீழ் வருமாறு எழுதி யிருக்கின்றார்:—"பிரை பெருமாட்டியுடன் நான் நியூகேட்டுக்குப் போயிருந்தேன். அங்கே அவர் அச் சிறை மாதர்களுக்கு விவிலிய நூலைப் படித்துக்காட்டு வதைக் கேட்டேன். அப்போது அப்பெண்களெல்லாரும் ஒழுங்காக உட்கார்ந்திருந்தினர். அச்சந் தரும் அவர்கள் முகங்களெல்லாம் அமைதியுடன் அம்மையாருடைய இனிய அறிவுரைகளைக் கேட்டபடியே இருந்தன. சிறிது நேரம் அமைதியா யிருந்து ஆண்டவனைத் தொழுத பின்னர், அம் மையார் விவிலிய நூலைத் திறந்து [3] **ஈசையா**வில் ஐம்பத்து மூன்றுவது பகுதியை எடுத்துப் படித்தனர். அப் பகுதியை அவர் படித்ததுபோல் வேறெவரும் படிக்க நான் கேட்ட தில்லை. அவர் ஆண்டவனிடத்துக் கொண்ட ஆழ்ந்த பற்றும், இனிய குரலும், தெளிந்த உரையும் கேட்போர் உள்ளத் தைக் கவர்ந்தமையைக் கண்டேன். அவர் விவிலிய நூலைப் படிக்கும்போது அவர் மனம் உலக நினைவின்றி இறைவ னிடமே படிந்து நிற்பதை யுணர்ந்தேன். பின்னர், அவர் சிறிது நேரம் நிமிர்ந்து அம் மாதர்களை நோக்கிப் பேசினார். அவரது பேச்சு மிகச் சுருக்கமாகவும் எல்லாரும் அறியத் தக்கவாறு இனிமையாகவும் அமைந்திருந்தது. அம்மை யார் அறிவுரைகளைக் கேட்டுக் கேட்டு அச் சிறை மாதர் கள் முகத்தோற்றம் நாளடைவில் மாறுதல் அடைந்து

1. Personal Re-collections 2. Rev. Taylor 3. Isiah

கொண்டே வருவதாயிற்று. கன்னெஞ்ச முடையாருங் கூட அம்மையார் பேச்சைக் கேட்டால் அதில் ஈடுபட்டு மனம் உருகிக் கண்ணீருங் கம்பலையுமாய் நிற்பர் இறைவன் மக்களிடத்துக் காட்டும் பேரன்பின் நிலையை அம்மையார் மிக அழுத்தமாயும் உருக்கமாயும் அச்சிறைமாதர் கட்கு எடுத்துமொழிந்தார்."

இன்னு மொரு மாது, "பிரை பெருமாட்டியார் வருவதற்குமுன் நியூகேட் சிறைச்சாலைக்குச் சென்ற போது, அங்குள்ள பெண்கள் விலங்கின்றன்மையுடைய ராய் ஒருவர் தலையை ஒருவர் பற்றி இழுத்தும், இறைவனைப் பழித்துப் பேசியுங், குடித்தும், ஆடிப்பாடிக் கலாம் விளைத்தும் இழிந்த முறையில் நடந்துவந்தனர். ஆனல், இப்போது அப்பெண்கள் அம்மையாரது முயற்சியின் பயனுகை மிக அமைதியாயும் ஒழுங்காயு மிருக்கின்றனர். நான் சிறைக்கூட முழுதும் பார்த்துக்கொண்டு வரும்போது ஒரு பெரிய மேசையின் பக்கத்தே அம்மையாரது கழகத்தைச் சார்ந்த ஒரு மாது பதினறு சிறைப் பெண்களுக்கு ஓர் அரிய நூலைப் படித்துக்கொண்டிருக்கக் கண்டேன். நான் சென்றதும் அப் பெண்களனைவரும் எழுந்து நின்று வணங்கினர். இப்போது எல்லா வகையிலும் அவர்கள் முன்னேற்ற மடைந்திருக்கின்றனர்" என்று கூறினர்.

அம்மையார் அச்சிறைமாதர்களை முன்னிலைப் படுத்திப் பேசுகையில் தம்மையும் அவர்களோடு சேர்த்து நாம் என்றே பொதுப்படப் பேசுவர். இதுகொண்டு நல்லாருந் தீயாரும் ஆண்டவனின் மக்களேயாவர் என்பதை விளக்கிச் சொல்லாமலே அவர் குறிப்பாகப் பொதுப்படக்

கூறி, அம்மாதர்களைச் சீர்திருத்திய நன்முறை வியக்கத்

" அம்மையாரைவிடச் சொல்வன்மையுடையாரைப் பார்த்திருக்கலாம்; ஆனால், அவரைப்போல், எஞ்சமயத் தலைவராகிய இயேசு கிறித்துவின் சிறந்த கோட்பாடுகளை வழுவாமற் கைக்கொண்டொழுகுவாரை யான் இதுகாறுங் கண்டிலேன்" என்று ஒரு பெருங் கூட்டத்தில் வேறோர் அறிஞர் மொழிந்தனர். இக் கூட்டத்தில் மட்டுமா? பெரிய கூட்டங்களிலெல்லாம் அம்மையாரைப் பற்றி இவ்வாறே பலரும் புகழ்ந்து பேசுவாராயினர்.

## அம்மையாரது உருவெளித் தோற்றத்தால் திருந்தினமை

அம்மையார் இறைவனிடத்திற் பேரன்புடையவராக லான் அவர்பால் கவர்ச்சியும் சொல்வன்மையும் மிகுதியாக விளங்கின. அவர் அச் சிறைமாதர்களுக்கு அறிவுரைகள் கூறிவரும் போதெல்லாம் அவர்களில் ஒருத்தி 'ஒன்று, இரண்டு' என்று சொல்லிக் கொண்டிருப்பதன்றி அவரது பேச்சைக் கேட்பதேயில்லை. இது கண்ட அம்மையார், ஒருகால் தம் பேச்சை முடித்துப்போகும்போது, அவளைத் தனியே அழைத்துச் சென்று அவள் தோள்மேற் கையைப் போட்டுக்கொண்டு, மெதுவாகவும் உறுதியாகவும் அவளை நோக்கி, "உன் கண்கள் ஒருபோதும் பிறர் பொருளை நாடற்க" என்று கூறிச் சென்றார். அம்மையார் கூறிய இவ்வொரு சொற்றொடர் அவள் உள்ளத்தில் நன்றாகப் பதிந்தது. அவள் சிறைநீங்கித் தன் இருப்பிடஞ் சென்றபின், ஒருநாள், தன் தலைவியின் பெட்டியில் ஒரு தங் கக் கணையாழியைக் கண்டாள். கண்டதும் அதனை எடுத்துத் தன் விரலில் அணிந்து கொண்டு பெட்டியை மூடிவிட்

டாள். மூடும்நேரத்தில் "பிறை பெருமாட்டி தன் கையை என் தோள்மேல் வைத்துப் பிறர் பொருளை நாடற்க என்று என் அருகிருந்து சொல்வதுபோற் கேட்டேன். உடனே அக் கணையாழியை அப் பெட்டியில் வைத்து மூடி விட்டு, அப்புறம வந்து அம்மையார் அங்கு நிற்கின்றாரா என்று அங்குமிங்கும் பார்த்தேன்; ஒருவரையுங் கண்டிலேன்" என்று கூறியுள்ளாள். இதுபோற் குற்றவாளிகள் சிலர் அம்மையாரது உருவெளித் தோற்றத்தைக் கண்டு மறுபடியுந் தங்குற்ற முணர்ந்து சீர்திருந்தலாயினர்.

# 10. அக்காலச் சிறைச்சட்டத்தின் கொடுமை

1817-ஆம் ஆண்டில் அம்மையார் தாம் ஒழுங்கான சிறைப்பார்வையைத் தொடங்கிய போது, [1] **குற்றவாளிகளின் சட்டம்** ஆங்கிலநாட்டில் கடுமைமிக்கதாகவும் புதுமையாகவும் இருந்தது. ஆண்மகனாயினும், பெண்மகளாயினும் அல்லது ஒரு குழந்தையாயினும் அவர்களுடைய ஆண்டினையும் இயல்பினையும் உணர்ந்து பாராமல் ஒரேவகையாய் அவர்கள் எல்லார்க்கும் ஒருபடியாகவே தூக்கு ஒறுப்புக் கூறிய மூந்நூறு வகையான குற்றங்கள் அச்சட்டத்தில் இருந்தன. அவற்றுள் முட்டைகள், ஆப்பிள் பழங்கள், கைகுட்டைகள், முதலியவற்றைத் திருடியதற்கும், கள்ளத்தாள் அச்சிடல், கள்ளக் கையொப்ப மிடல் முதலியவற்றிற்கும், இவ்வகையான குற்றங்களில் தெரிந்தோ தெரியாமலோ தலையிட்டதற்குமாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கெல்லாந் தூக்கு ஒறுப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இன்னும், குற்றவாளிகளெனத் தெரிந்தவர்களையும், தெரியாதவர்களையும் வேறு பிரித்துவையாமல் ஒருங்கே இருண்ட அழுக்கான தொத்து நோய்களுக்கு இடமான சிறு அறைகளில் அடைத்து வைத்தனர். அப்படி அடைப்பதால் அச்சிறையாளர்க்கு யாது நேருமென்பதை அரசியலாரும் சிறைச்சாலைத் தலைவர்களும் கருதிப் பாராமலிருந்தனர்; குழந்தைகளோடு அவர்களின் தாய்மார்களையும் அனுப்புதல் சட்டத்திற்கு மாறானது என்பதை அறியாராயினர்; முரட்டுத்தனமுள்ள கொடுங்குற்றவாளிகளோடு ஒன்று மறியா இளம்பிள்ளைகளையும் ஒன்றாக அடைத்துவந்தனர்; அவ்வாறு செய்வதில் அவ்வேழைப்

---

1. Criminal Law

பிள்ளைகள் தீயனவற்றைத் தவிர அங்கு வேறு ஏதும் அறிய மாட்டாதிருந்தனர்'.

நியூகேட் சிறைச்சாலையில், ஒரு நாளைக்கு நான்கு பேர் விழுக்காடு தூக்கிலிடப்பட்டு வந்தார்கள். ஆகவே, அதனை நிறுத்த வேண்டுமென்று அம்மையார் பெருங்கவலை கொண்டார். இக்கொடிய சட்டத்தைத் திருத்துவதற்காக அம்மையார் செய்த பெரு முயற்சிகளில் அறிவுடையார் பலர் ஈடுபட்டு உழைக்கலாயினர். முறைமன்ற நடுவர்கள் கொடிய சட்டத்தின்படி தங் கடமைகளை நிறைவேற்றப் பின்வாங்கினார்கள். சான்றுகூறுபவர்கள் கூறும் பொய்ச் சான்றுகளால் அவர்கள் பின்னிடைந்தார்களென்றே சொல்லல் வேண்டும். சட்ட நூல்களிற் கூறப்படும் முறை ஒருவகையாகவும், நடைமுறையிற் கையாளும் முறை வேறுவகையாகவும் இருந்தது.

## தூக்கிடுவது பற்றி அம்மையார் கருத்து

(1) 'சிறு குற்றங்களுக் கெல்லாங் குற்றவாளிகளைத் தூக்கிலிடுவதால் ஒரு சிறு நன்மையும் விளையப்போவதில்லை' யென்று அம்மையார் கருதினார். 'தூக்கிலிடுவது குற்றவாளிகள் நெஞ்சத்தைக் கடுமையாக்குவது மன்றி அவர்கள் தம் உயிரைத் துரும்பென மதிக்கும்படியுஞ் செய்து விடுகின்றது. இக் கொடிய தூக்கு ஒறுப்பின் மூலம் குற்றவாளிகளை எவ்வாறு திருத்த முடியும்? அதனால், அவர்களிடங் கடவுள் நம்பிக்கைக் குறைவும், முரட்டுத் தனமுமே ஏற்படுகின்றன. இக்காரணத்தாற் குற்றங்கள்

குறைவதற்கு வழியின்றி அவை மேன்மேலும் பெருகிக் கொண்டே போகின்றதுமல்லாமல், அவற்றால் சிறைவாழ்வும், தூக்கிடுவதும் மிகுதிப்பட்டே வருகின்றன. சிறைவாழ்வு, குற்றவாளிகளை நல்லவர்களிடமிருந்து பிரித்துக் கெட்டவர்களோடு ஒன்றுபடுத்துகின்றது. இதைவிடத் தீயவர்களைத் தீயவர்கள் கூட்டுறவினின்றும் பிரித்து, நல்லவர்களோடு பழக விடுவதே நல்லதாகும்.'

(2) 'சிறைச் சாலையிலுள்ள இருண்ட அறைகள் குற்றவாளிகளின் உடலுக்கும் உள்ளத்துக்குந் தீமை விளைக்கும். விடியற் காலத்தில் விழிக்கும்போதெல்லாம் அகன்ற அழகிய வானையும் பகலவனையும் பார்க்க வேண்டிய குற்றவாளிகளின் கண்கள், தம்மைப் போன்ற அல்லது தம்மினும் மிகக் கொடிய கொலைஞரைப் பார்ப்பதால் அவர்களிடம் என்ன மாறுதல் ஏற்படும் என்பதை நினைத்துப் பாருங்கள்! தீமையைக் காண்பதும் நினைப்பதும் தீமைக்கு வழியேயன்றி நன்மைக்கு வழியாக மாட்டா.

(3) 'குற்றவாளிகளை மற்றவர்களைப் போல் நல்ல முறைகளிற் பழக விடுவோமாயின் அவர்கள் திருந்துவர். குற்றவாளிகளின் நிலைமைக்குத் தக்கவாறு அவர்களைப் பிரித்து வைக்க வேண்டும்.'

(4) 'மக்களியற்கையானது, அவர்கள் சார்ந்திருக்கும் இடம் கூட்டுறவு என்பவற்றையே முதன்மையாகக் கொண்டிருக்கின்றது. ஆகலான், சிறையில் நல்ல காற்றோட்டமும், வெயில் வெளிச்சமுந், தூய்மையும், நல்லோர் உறவும், அறிஞர்களின் அறிவுரைகளும் நிறைந்திருத்தல் **வேண்டும்'**

என அம்மையார் கூறவே, 'சிறைகளை இவ்வளவு மென்மையான இடமாக்கினால் குற்றவாளிகளை ஒறுப்ப தெங்ஙனம்?' என்றும், "இத்திருத்த முறைகளால் அவர்கள் தங் குற்றங்களை எவ்வாறு உணர்வார்கள்?" என்றுங் கேள்விகள் எழுப்பினர் ஒருசிலர். அதற்கு அம்மையார், "இவர்கள் கருத்துப் பொருந்தாது. கொடுமை மக்கள் உள்ளத்தை ஒருகாலும் பண்படுத்தாது; குற்றவாளிகளென அனுப்பப்படுவோ ரெல்லாரையும் ஆராய்ந்து பார்க்கும் போது அவர்கள் உண்மையில் குற்றஞ் செய்தவர்களல்லர் என்றும், அரசியலாரால் சிறைக்கு அனுப்பப்படுங் குற்றவாளிகள் மூவகைப்படுவர் என்றும், அவர்கள் சிறு குற்றங்கள் செய்தோர், உடல் நலங் கெட்டோர், மூளை கலங்கிய பித்தர் ஆகியோ"ரென்றுங் கூறினர்.

நல்லோர் பழக்கத்தாலும், அறிவுரைகளாலுஞ் சீர் திருந்தாத குற்றவாளிகள் திரும்பத்திரும்பச் சிறைச்சாலைக்குப் போய்க்கொண்டேதா னிருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக; ஓராண்டில் நியூகேட் சிறை சென்றவர்களுள் எழுநூறு பேர் முன்னே பலமுறை சிறைசென்றவர்களாவர். இரண்டாயிரங் குற்றவாளிகள் இருபது முறைக்கு மேல் சிறை சென்றிருக்கின்றனர். இவர்களிற் பலர் நரம்புப் பிணியாளர்; பலர் இழுப்பு நோயுடையவர்கள். இவர்கள் திடீரெனத் தெருப்புறங்களில் விழுந்துகிடந்து வருந்துபவர்களாவர். இவர்கள் பெரும்பாலுந் தங்கள் செய்கைக்குத் தாங்களே பொறுப்பாளிகளல்லர். துன்பவாழ்விற் கிடந்துழலும் இவர்களைச் சிறைச்சாலைக் கனுப்பி மேலும் மேலுந் துன்புறுத்துவது தவறாகும். இவர்களின் பொருட்டு அரசியலார் **குற்றத் திருத்த நிலயங்கள்** அமைத்து அவர்களைச் சீர்திருத்த வேண்டும்; அல்லது

அவர்கள் மருத்துவர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் பெற்றபின் அவர்கட்கு வேண்டுவன செய்தல் வேண்டும். அரசியலார் இவ்வாறு செய்வார்களானால், சிறை செல்லுங் குற்றவாளிகளின் தொகை குறையும். ஒருமுறை சிறைக்குச் செல்கிறவர்கள் மறுபடியும் அங்குச் செல்ல நேரிடாது. இவ்வாறு சிறு குற்றங்கள் செய்தோர், நரம்புப் பிணியாளர், பித்தர்களாகச் சிறைக்கனுப்பப் பட்டவர்களுள் குற்றவாளிகளாக ஆயிரம் குழந்தைகள் இருந்தனர் என்கின்றார் அம்மையார். அம்மையார் கருத்திற் கிசைவாக 1909–ஆம் ஆண்டில் [1] **ஹிப்பர்ட் ஜர்னல்** என்ற செய்தித்தாளில் குற்றத் தடைச் சட்டத்தைப் பற்றி எழுதிய பகுதியில் [2] **சர். உவில்லியம் காலின்ஸ்** என்பார் [3] **குவின்டின் ஹாக்** வரலாற்றினின்றுந் தாம் நேரிற்கண்ட சில செய்திகளை எழுதுகின்றார். பதினொரு ஆண்டுள்ள ஓர் ஏழைச்சிறுவன் வெளியிடத்திற் படுத்திருந்த குற்றத்திற்காக மூன்று முறை சிறைக் கனுப்பப்பட்டான். பத்தாண்டினனான அவன் தம்பியும் அதே குற்றத்திற்காக நான்கு முறை சிறைக் கனுப்பப்பட்டான். இப்பிள்ளைகளது வீட்டுநிலை மிகக் கொடியது. இவர்களின் தந்தை குடி வெறியால் இப்பிள்ளைகளின் தாயைக் கொன்றான். இவன் மறுமணஞ் செய்து கொண்டபின், தம் பிள்ளைகளை நோக்கி, ‘ நீங்கள் இருவீரும் இப்போதே என் வீட்டை விட்டு ஓடிப் போங்கள்! போகா விட்டால் உங்களிருவரையுந் தண்ணீரில் அமிழ்த்திக் கொன்றுவிடுவேன் ’ என்றான். இவன் இரண்டாம் மனைவியோ இவனைவிட மிகக் கொடியவள். தன் கணவன் அவர்களைக் கொல்லுமுன் அவர்களுடைய மிதி

1. Hibbert Journal 2. Sir William Collins 3, Quentin Hogg

யடிகளைத் தன்னிடங் கொடுத்துவிடும்படி அவள் கேட்டுக் கொண்டாள். பின்னர் அக்கொடிய தந்தையானவன் தன் இரு பிள்ளைகளையும் வெளியே தள்ளிக்கொண்டுபோய் ஆற்றில் தள்ளிவிட்டான். அவர்கள் தப்பி வெளிவந்துவிட்டனர். பின் படுக்க இடமின்றித் தவித்த அக்குழந்தைகள் வெளியே படுத்திருந்ததறகாகக் குற்றவாளிகளாக்கப்பட்டார்கள். இத்தகைய துன்பநிலையிற் குறறஞ்செய்த பிள்ளைகள் குறறவாளிகளாவார்களா? இக் குற்றத்தை அவர்கள் செய்யுமாறு செயத அவர்களின் தந்தையல்லவோ குற்றவாளியாவன்? இதை ஆராய்ந்து பார்த்து இத்தகைய குற்றவாளிகளை இரக்கத்துடன் மன்னித்து அவர்களுக்கு வேண்டுவன செய்தலன்றோ சிறந்த முறை!

பின், **ஹாவர்டு கழகத்தின்** அமைச்சரான [1] **தாமஸ் ஹோம்ஸ்** என்பார் கூறுவதாவது: 'மக்களிடையே இவ்வளவு குற்றந்தான் ஏற்படுவானேன்? இதற்கு அடிப்படை ஏதேனு முண்டா என்று நாம கருதிப் பார்ப்போமாயின், அது குடியினுற்றான் என்றே கூறல்வேண்டும். இங்கிலாந்து தேயத்தில் குடியின் கொடுமையால் ஆண்டுக்கு அறுபதி னயிரம்பேர் இறக்கின்றனர். இன்னும், இதனல் வலுவிழந்தோரும், நெறி பிறழ்ந்தோரும, அறிவிழந்து பித்தராஞேரும், கொடிய குற்றஞ் செய்வோரும் எண்ணுக் கடங்காப் பல்லாயிரவராவர்' என்பதே.

1908-ஆம் ஆண்டில் [1]**ஸ்காத்லாந்து தேயத்**தின் அரசியல் அறிக்கை ஒன்று "சென்ற ஆண்டில் குடி வெறியாலும், குடியால் ஏற்பட்ட தீய செயல்களாலும் குற்றச் சட்டத்திற் காளானவர்கள் ஒரு நூற்று மூவாயிரம் பேர்"

1. Thomas Holmes 2. Scotland

என்று கூறுகின்றது. குடியினாலேதான் வெட்டுக் குத்துக்கள் ஏற்படுகின்றன. குழந்தைகளைக் கொடுமையாக நடத்தும் வகையில் முறைமன்றத்தில் வந்த வழக்குகள் மட்டும் ஆண்டுக்கு ஐந் நூற்று எண்பத்தொன்பதாகின்றன. கொலை, கொலைக் குற்றம் ஆகியவற்றுள் நூற்றுக்கு எண்பது பேர் குடியினாலேயே சிறைக் கனுப்பப்படுகின்றனர். மற்றைக் குற்றங்களிலும் குடியினால் வருங் குற்றங்களே மிகுந்திருந்தன. ஆகலான், குடி நின்று விட்டால் மக்களிடத்துள்ள பல கொடிய குற்றங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு ஒழிந்து விடும். குற்றங்களை செய்து வாழும் கீழ் மக்களிடையே கல்வியறிவுங் கடவுளிடத்தன்பும் நல்லொழுக்கமும் உண்டாமாறு அறிவுடையோர் சிறந்த பணி செய்தலே அக் கீழ்மக்கள் சீர்திருந்துவதற்கு வழியாகும். இச் சிறந்த பணி இப்போது தொடங்கப் பட்டிருக்கின்றது. ஏழை மக்களின் உள்ளக் கருத்துக்களையும் அவர்களின் கவர்ச்சிகளையும் அறிந்து அவைகட்கேற்ப அவர்களிடையே உழைத்தல் வேண்டும். எலிசபெத் பிரை அம்மையார் செய்ததுபோல் ஏழை எளியவர் குற்றவாளிகள் ஆகியோரின் மனப்போக்கினையும் குறைபாடுகளையும் நன்றாக அறிந்த பின்னரே அவர்கள் சீர்திருந்து முறைகளை அவர்கட்குக் கற்பிக்கலாம். அம்மையாருடைய கடவுட்பற்றையும், கலங்கா நெஞ்சத்தையும், மக்கட் பொதுப்பணியையும் நாம் மேற்கொண்டால் இழிந்தோரை உயர்ந்தோராக்கலாம். அம்மையார் மேற்கொண்ட சீர்திருத்தப் பணியை நாம் மேற்கொள்வது மிகுந்த உழைப்புத் தருவதாயினும் அத் துன்பத்தைப் பொருட்படுத்தாது அப் பணியைச் செய்வோமாயின், வெற்றி கட்டாயம் நமக்குக் கிடைக்கும்.

## தூக்கு ஒறுப்பை ஒழிக்க முயற்சி

கள்ளக் கையொப்பம், களவு முதலிய பல குற்றங்களுக்காகத் தூக்கு ஒறுப்பு அடைந்த குற்றவாளிகள் சிலர் நியூகேட் சிறையிலிருந்தனர். அத்தூக்கு ஒறுப்பினை விலக்க அம்மையார் முயற்சி செய்வாராயினர். கொலைக்குற்றந் தவிர மற்றைக் குற்றங்களுக்காகத் தூக்கிடப்படுவோரை அதனின்றுந் தப்புவிப்பது பாவமாகாதென்று அம்மையார் கருதினர். நியூகேட் சிறையில் ஹாரியட் ஸ்கெலிட்டன் என்னும் ஒரு மாதிற்கு அளித்திருந்த கொடிய தூக்கு ஒறுப்புப் பொதுமக்களிடையே பெரியதொரு கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. இம் மாது தங் காதலனொடு சேர்ந்து கள்ளத் தாள்கள் (கள்ள நோட்டுகள்) பதிப்பித்தாள். இதன்பயனாக இவள் தூக்கு ஒறுப்புக் காளாயினள். இவள் சிறையிற் காட்டிய அமைதியும் பொறுமையும் மிகவும் பாராட்டத் தக்கதாயிருந்தன. ஆதலால் இவளை நேரிற் கண்டார் எவரும் இவள்பால் இரக்கங்கொண்டனர். இவள் குணநலத்தைத் தெரிந்த செல்வமாதர்கள் பலர் இவளை வந்துபார்த்தனர். இவர்களெல்லாரும் இம்மாதின் தூக்கு ஒறுப்பைத் தடுப்பதற்கு பிரை பெருமாட்டியை முயலுமாறு வேண்டினார்கள். அதன்படியே அம்மையார் இவள் தூக்கைத் தடுக்க எவ்வளவோ முயன்றனர். ஆனால், உள்நாட்டமைச்சர் [1]**ஹென்றி ஆடிங்டன்** என்பார் பிரை அம்மையாரின் வேண்டுகோளை மறுத்து விட்டார். முடிவில் அம்மாது தூக்கிடப்பட்டாள். இந் நிகழ்ச்சி அம்மையாரின் மனதைப் பெரிதும் புண்படுத்தியது.

இன்னும், "[2]**எலிசபெத் பிரிக்கர்** என்னும் மாதைத்

---

1. Henry Addington 2. Elizabeth Fricker

தூக்கிடப் போவதறிந்து அவளை இன்று போய்ப் பார்த்தோம்; அவள் உள்ளங் கலங்கி யிருந்தது. கொடிய இறப்பின் அச்சத்தால் அவளது நரம்பு நாடிகள் சில்லென்று குளிர்ந்திருந்தன. நாங்கள் அவளுக்கு ஆறுதல் கூறியும் அவள் மனம் அமைதி பெறவில்லை. பின்னர் பெரியாரொருவரை அழைத்துவந்து அவட்கு ஆறுதல் கூறினோம். அவ்விள மங்கையோடு ஆறுபேர் தூக்கிடப் படுமாறு கட்டளையிடப் பட்டிருந்தனர். அவர்களுள் ஒருவனுடைய மனைவியும் ஒரு குற்றவாளி. அவளுக்கு ஏழு குழந்தைகளிருந்ததுடன் அவள் அந்நேரத்தில் நிறைசூலியாகவு மிருந்தாள்! ஐயகோ! அவளைத் தூக்கிலிடப் போகுஞ் செய்தியை அறிந்த அவள் கணவன் திடீரென உள்ளங் கலங்கப் பெற்றுய்ப் பித்தனைப் போல் அறிவு மயங்கிப் பக்கத்திலிருந்த சிறைக் காவலனை மிக வன்மையாகக் கடித்துவிட்டான்! கடியுண்ட காவலன் செந்நீர் ஒழுக வெளியே ஓடினான்.'' என அம்மையார் கூறுகிறார். நிறைசூலியைத் தூக்கிடலாகாதென்று அம்மையார் முயன்றதன் பயனாகக் குழந்தை பெற்று ஒரு திங்கள் கழித்து அவளைத் தூக்கிடுமாறு கட்டளையிடப்பட்டது. இத்தகைய கொடுங் காட்சிகளைக் கண்டபோது, அருளிரக்கமே ஒரு வடிவெடுத்தாற் போன்ற பிரை அம்மையாரின் மனம் அனலிடைப் பட்ட மெழுகுபோல் உருகுவதாயிற்று. சிறைப்பட்டவர்களின் குற்றத்திற்கேற்றவாறு அவர்களை ஒறுத்தல் வேண்டுமென்றும், அதற்கான சட்டம் அரசியலாரால் சிறைக்கூடங்களிற் கொண்டுவரப்படல் வேண்டுமென்றும் அம்மையார் பெரிதும் முயன்றார். [1]**ஹார்கோர்ட் பெருமாட்டி**, பிரை பெருமாட்டியின் கருத்திற் கிணங்கி அதிற் பேரூக்கங் கொண்

1. Lady Harcourt.

டனர். அவர் பிரை பெருமாட்டியாரை வற்புறுத்தி அழைத்துச் சென்று அரசகுடும்பத்தினரிடம் அறிமுகப் படுத்தினர். அரசரும் அரசியும் மற்றுமுள்ளாரும் அம்மை யாரைப் பேரன்புடன் வரவேற்றனர். ஆயினும், அம்மை யார்க்கு இச் சிறப்பெல்லாம் பெருமகிழ்வாகத் தோன்ற வில்லை. அவர் எண்ணமெல்லாம் தக்க காரணமில் லாமல் தூக்கிடப்படுங் கொடுமையை விலக்குவதிலேயே து கிடந்தது.

3129

# 11. அம்மையாருக்கு வந்த பொருட்கேடு

அம்மையார் இவ்வாறு சிறைச்சாலைப் பணியில் ஈடுபட்டுப் பெரு நன்மைகள் செய்துகொண்டிருக்குங் காலத்தில் இங்கிலாந்து தேய முழுதிலும் பணநெருக்கடி உண்டாயிற்று. அதனால் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்தனர். அதுவுமன்றிச் சில கொடியோர் ஆங்காங்குத் தொழிற்சாலைகளிலுள்ள பொறிகளை (இயந்திரங்களை) உடைக்கவும் வைக்கோற் படைப்புகளுக்குத் தீயிடவும் தொடங்கினர். இந்நிலையில் அம்மையாரின் கணவனார் பங்காளியாயிருந்த பொருள் நிலயம், 1828-ஆம் ஆண்டில், முறிய நேர்ந்தது. இதனால் அம்மையார்க்குப் பொருட்கேடு மிகுதியாயேற்பட்டது. இஃது அவர் செய்துவரும் அறப் பணிக்கு இடையூறு யிருந்தது.

அம்மையார் குடும்பம் மிகப் பெரிதாதலால் அவர்க்கு இப்பொருட் கேடு துன்பந் தருவதாயிற்று. இதனையறிந்த அன்பர்கள் பலர் பல இடங்களிலிருந்தும் ஆறுதற் கடிதங்கள் எழுதினர். பொருள் முட்டுப்பாட்டால் அம்மையார் தம்மிடம் நீண்ட காலமாக வேலைபார்த்த வேலையாட்களையும் விலக்கவேண்டியவரானார். இன்னும், அவர் பாதுகாத்துவந்த அண்டை அயலிலுள்ள முதியோரையும் உதவியற்றோரையும் கைவிடவேண்டியவரானார்; தம் கைச்செலவில் நடத்திவந்த பள்ளிக்கூடங்களையும் நிறுத்த வேண்டியவரானார். பெருஞ் செல்வ வாழ்க்கையில் இருந்த அம்மையார் இத்துன்பநிலையில் ஞாயிற்றுக்கிழமையன்று கோயிலுக்குப் போகவேண்டுமா வேண்டாமாவென்று முதலில் மனந்தடுமாறினர். பின் ஒருவாறு மனந்தேறி, "ஆண்டவன் என் உயிரைப் போக்கினும்

நான் அவனை நம்பாதிரேன்" என்று கூறிக் கோயிலுக்குச் சென்றனர் இவ்வாறு அம்மையார் இன்ப துன்பமென்னும் இருநிலைகளிலும் இறைவனை ஒரே நினைவாய்ப் பற்றி நின்றனர். குடும்பத்தில் துன்பப்படும் இவர்தம் உளநிலையைப் பற்றி இவர்தம் மகளார் ஒருவர் 'என் அருமை அன்னையாரது உளநிலை இன்பதுன்பங்களில் ஒரே தன்மையதாயிருக்கும்; எப்போதும் அவர் இனிய தோற்ற முடையவர்' என்று கூறுகின்றார். தமக்குப் பொருட்கேடு வந்தபின் அம்மையார் தம் அழகிய பெரிய வீட்டைவிட்டுத் தங் குடும்பத்தொடு தம் மகனது வீட்டுக்குச் சென்றனர். அன்றியும், அவர் தங்கணவரது வாணிகத் தொழிலை வயதுவந்த தம் ஆண்மக்கள் செய்யுமாறும் ஏற்பாடு செய்தனர். அம்மையாரின் உடன்பிறந்தாரான **சாமுவேல் கர்னி** என்பார் இக்காலத்தில் அவர்க்குப் பேருதவியா யிருந்ததுமன்றித் தாமிருந்துவந்த [1] **அப்டன் லேன்** என்னுந் தெருவிலுள்ள ஒரு வீட்டையுங் கொடுத்து உதவினர்.

## துன்பத்திலுஞ் சிறைப்பணி

அம்மையார் இத்துணைத் துன்பங்கட் கிடையிலும் தாம் ஆற்றிவந்த சிறைப்பணியை மறந்து விடவில்லை. அவர் நியூகேட் சிறைச்சாலையிற் செய்த சீர்திருத்தங்களின் பயனாக உலகெங்கணும் உள்ள சிறைச்சாலைகளில் பல நன்மைகள் விளைந்தன. இலண்டனிலுள்ள சிறைச்சாலைகளிலெல்லாம் மேற்பார்வையாளர்களும் ஆசிரியர்களும் பெண்பாலர்களாகவே ஏற்படுத்தப்பட்டனர். சிறைமாதர்களுக்குச் சமயக் கல்வியும், தொழிற் கல்வியும் கற்

1. Upton Lane

பிக்கப் பட்டன. குற்றவாளிகளின் குழந்தைகள் தனியே நல்ல முறையில் நடத்தப்பட்டனர். சிறைப் பெண்கள் ஒவ்வொருவரும் உயர்ந்த ஒழுக்கமும் சிறந்த நோக்கமும் உடையவர்களாய்ச் சீர்திருந்தலாயினர். அம்மையார் தாமிருந்த இடங்களிற் செய்த சிறைப்பணிமட்டும் போதாதென் றெண்ணினார். 1829-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் உறுப்பினராயிருந்த தம் தங்கையின் கணவா [2] **சர் தாமஸ் பவல் பக்ஸ்டன்** என்பவரை வட இந்தியாவிற் சில இடங்களில் நடைபெற்ற உடன்கட்டையேறல் என்னுங் கொடிய வழக்கத்தை ஒழித்தற்கு ஒரு சட்டங் கொணரச் செய்தனர். அச் சட்டமும் அதே ஆண்டில் நிறைவேறியது.

## இலண்டன்மாநகர்க்கு வெளியேயும் கழகங்கள் நிறுவல்

இலண்டன்மா நகர்க்குப் புறம்பேயுள்ள பல நாடுநகரங்களையும் அம்மையார் பார்வையிட்டு, ஆங்காங்குத் தக்கார் பலரைக்கொண்டு [2] **பணியாளர் கழகங்கள்** நிறுவி, அக்கழகத்தினர் சிறைக்கூடங்களை முறையாகப் பார்வையிடச் செய்தனர். அயர்லாந்திலுள்ள [3] **டப்ளின், லண்டன் டெரி, லிஸ்பர்ன்** முதலிய பல ஊர்களையும் அம்மையார் போய்ப் பார்வையிட்டனர். அந் நாட்டு மக்கள் அம்மையாரிடம் மிகுந்த அன்பு காட்டினார்கள்.

அம்மையாா ஐரோப்பாவிலுள்ள ஏனைய பகுதிகட்கு இதுவரை சென்றதில்லை. **ஜர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ருஷியா**

1. Sir Thomas Fowell Buxton 2. Association of Workers.
3. Dublin, Londondery, Lisburn.

முதலிய நாடுகளிலுள்ள சிறைச்சாலைத் தலைவர்கட்குச் சிறையின் சீர்திருத்தங்களைப் பற்றி அடிக்கடி அவர் கடிதங்கள் எழுதிவந்தார். இதன் பயனாக அப்பெரிய நகரங்களிலுள்ள சிறைக்கூடங்களி லெல்லாம் பலவகை யான சீர்திருத்தங்கள் ஏற்படலாயின. அம்மையார் எழுதிக் கேட்டதற் கிணங்கி ஜர்மனியின் தலைநகரான **பெர்லின்** என்னும் ஊரிலுள்ள சிறைச்சாலையை மேற்பார்வையிட அவ்வூரவர் **மாதர் கழகம்** ஒன்று ஏற்படுத்தினர். அம்மையாரது எழுத்தின் பயனாக **டியூரின்** என்னும் ஊரில் சீர்திருந்த விரும்பும் சிறைமாதர்களுக்கென ஒரு **புகலிடம்** அமைக்கப்பட்டது.

## ருஷியாவின் சிறை

ருஷியாவிலுள்ள சிறைக்கூடங்கள் மிகவுஞ் சீர்கேடான நிலையிலிருந்தபடியால், அந்நாட்டினர் அம்மையாரை அங்கு வருமாறு கடிதவாயிலாய் வேண்டினர். அப்போது, அம்மையார் அங்குப் போக வாய்ப்பில்லா திருந்தனர். ஆகலான், அம்மையாரும் [1] **வால்ட்டர் வென்னிங்** என்பாரும், அவர் உடன்பிறந்தார் **ஜான்** என்பாரும் அந்நகரச் சிறைக்கூடத் தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதலாயினர். இன்னும், பிரை பெருமாட்டியார் சிறைச்சாலைச் சீர்திருத்தங்களைப்பற்றி **ருஷியநாட்டரசி**யார்க்கு எழுதினார். அறிவும் இரக்கமுமுடைய அவ்வரசியார் அந்நாட்டிலிருக்கும் ஐந்து சிறைக்கூடங்களையும் மேற்பார்வையிட 'மாதர் கழகம்' ஒன்று ஏற்படுத்தி அதிலிருந்து அவைகட்குதவி செய்யுமாறு செய்தனர்; பின்னர் இம்மகிழ்ச்சியான செய்தியை வென்னிங் துரைமகனார்வாயிலாக பிரை பெருமாட்டியார்க்குத் தெரிவித்தார். அவ்வரசியார் வென்

1. Walter Venning

னிங் துரைமகனுர்க் கெழுதுகையில் 'பிரை அம்மையார் கூறும் புகழுரைகளுக்கு யான் தகுதியுடையவளல்லள்' என்றும், 'அம்மையார் ஏழை எளியவர்கள்பாலும், சிறை மாதர்களிடத்தும் காட்டிவரும் மெய்யன்புந் தன்னலமறுப் பும் எல்லாம் வல்ல ஆண்டவனுலேயே அவர்க்கு அளிக்கப் பட்டிருக்கின்றன' என்றுங் குறிப்பிடுகின்ருர்.

இன்னும், [1] **நிக்கோலாஸ்** என்னும் அரசரும், அம்மை யாரின் அருட்பணியைத் தங் கருத்துட் கொண்டனர். ஒரு நாள் தம் ஆட்சிக்குட்பட்ட சிறைக்கூட மொன்றை அவர் பார்க்கச் சென்றனர். பார்த்துக்கொண்டு வரும்போது கடுணளிகளிருக்கும் சிறையில் நரைத்த மூன்று கிழவர் கள் முழந்தாளிட்டு அரசரை வணங்கி, 'எந்தையே! எம் கடுந்துயர் தீர்த்தருளு' மென்று வேண்டினர். அவ்வர சர் உடனே அவர்களை ஏதுங் கேளாமல் விடுதலை செய் தனர்.

இதுபோல், அம்மையார் கருத்துக்கிசைய **ஸ்விடன், ஹாலண்டு** முதலான பிறநாடுகளில் உள்ள சிறைக்கூடங் களிலும் சீர்திருத்த முயற்சிக ளெடுக்கப்பட்டன. அவ் விடங்களிற் பெண்கள் தம் முரண்பட்ட குணத்தாற் குற்றத்தை ஒப்புக்கொள்ளாமையினுல், அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் என்று ஒப்புக்கொள்ளும்வரை அவர்களைச் சவுக்காலடிப்பது வழக்கமா யிருந்தது. பிரை பெருமாட்டி யாரது பெரு முயற்சியால் ஆங்காங்கு மேற்பார்வைக் கழ கங்கள் ஏற்பட்டதின்பின் இத்தகைய கொடிய ஒறுப்புக் கள் குறைந்துவந்தன. இன்னுமிவர், [2] '**நாட்டினர் பாதுகாப் புக் கழகம்** ஒன்று நிறுவி, அதன் வாயிலாகப் பணியாற்றக்

1. Nicholas 2. Nation Guardian Institution